பக்கங்கள்:-29

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | வைகாசி 13 | ஞாயிற்றுக்கிழமை | 26.05.2024 | அதிர்வு 299

## யாழ். வைத்தியசாலைக்குள் மதுபோதையில் குழப்பம் விளைவித்த மூவர் கைது

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குள் மதுபோதையில் நுழைந்து பாதுகாப்பு உத்தியோகத்தர்களுடன் முரண்பட்டுக் குழப்பத்தில் ஈடுபட்ட 06

# போர்க்குற்றவாளிகளை நீதியின் முன் நிறுத்த வேண்டும் அதை நினைவுறுத்தும் அடையாளமே முள்ளிவாய்க்கால்!

## பிரிட்டன் தொழிற்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டு



முள்ளிவாய்க்காலும், போரிலும் உயிரிழந்தவர்களை நினைவுகூருவதும் கடந்த கால மீறல்களுடன் தொடர்புடைய குற்றவாளிகளை நீதியின் முன் நிறுத்த வேண்டும் என்பதை நினைவுறுத்தும் அடையாளங்களாகப் பார்க்கப்பட வேண்டும் என்று பிரித்தானிய தொழிற்கட்சித் தலைவர் கியர் ஸ்ராமர் வலியுறுத்தியுள்ளார்.

பிரித்தானிய தமிழர் பேரவையால் லண்டன் ரபல்கர் சதுக்கத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே தொழில் கட்சியின் தலைவர் கியர் ஸ்ராமர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

"இலங்கையில் இறுதிக்கட்டப் போரில் கொல்லப்பட்ட ஆயிரக்கணக்கானோரையும், அங்கு இடம்பெற்ற மிகமோசமான மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்டோரையும் 06

# தமிழர் தரப்பு ஒற்றுமையாகச் சேர்ந்து பொது வேட்பாளரை நிறுத்துவார்களா?

## விக்கியிடம் ரணில் இப்படிக் கேள்வி

(எஸ். நிதர்ஷன், ந.லோகதயாளன்)

தமிழர் தரப்பில் ஒற்றுமையாகப் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்த முடியுமா? பெயரை அறிவிக்க முடியுமா? என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தமிழ் மக்கள் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரனிடம் கேள்வி எழுப்பினார்.

மூன்று நாள் பயணமாக வடக்கு வந்துள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நேற்று மாலை நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரனின் யாழ். இல்லத்துக்குச் சென்று அவரைச் சந்தித்துக் கலந்துரையாடினார். 06




# அனைத்துப் பிரச்சினைகளுக்கும் அநுரவின் ஆட்சியில் தீர்வு உறுதி

## விஜித ஹேரத் எம்.பி. தெரிவிப்பு



அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி ஆட்சியில் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு கிடைக்கும் என்று அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

அதேவேளை, தேசிய மக்கள் சக்தி ஆட்சியில் அமைச்சரவை எண்ணிக்கை 25 ஆக வரையறுக்கப்படும் எனவும், அமைச்சருக்கு ஆலோசனை வழங்கச் 06




யாழ்ப்பாணம் வந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தன்னுடைய நிகழ்வுகள் அனைத்துக்கும் அழைத்தும் வருகை தராத யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனை நேற்று மாலை தாமே அவரது வீடு தேடிச் சென்று சந்தித்திருக்கிறார்.

"நீங்கள் இரண்டு, மூன்று வாரங்களாக நாடாளுமன்றப் பக்கமும் வரவில்லை. உங்களைக் காண முடியவில்லை. உங்களுக்கு சுகவீனம் என்றார்கள். அதுதான் பார்க்கத் தேடி வந்தேன்." – என்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. 06






# மன்னாரில் அநுரகுமாரவுக்கு நேற்று அமோக வரவேற்பு!

**(மன்னார் நிருபர்: எஸ்.ஆர்.லெம்பேட்)**

மன்னார் மாவட்ட மக்கள் மற்றும் தேசிய மக்கள் சக்திக்கு (ஜே.வி.பிக்கு) இடையிலான மக்கள் சந்திப்பு நேற்றைய தினம் சனிக்கிழமை மாலை 4.30 மணியளவில் மன்னார் நகரசபை மண்டபத்தில் இடம்பெற்றது.

தேசிய மக்கள் சக்தி (ஜே.வி.பி.)கட்சியின் யாழ் மாவட்ட அமைப்பாளர் ராமலிங்கம் சந்திரசேகரன் தலைமையில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க கலந்து கொண்டார்.

பெரும் எண்ணிக்கையில் மக்கள் கலந்து கொண்டு அவருக்கு பிரமாண்ட வரவேற்பு வழங்கினர்.

இந்த மக்கள் சந்திப்பில் தேசிய மக்கள் சக்தியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள், மன்னார் மற்றும் கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் மன்னார் மாவட்ட மக்கள் தேசிய மக்கள் சக்திக்கும் அதன் ஜனாதிபதி வேட்பாளர் அனுரகுமார திஸநாயக்காவுக்கும் ஆதரவை வழங்குமாறு நேற்றைய சந்திப்பின் போது கோரிக்கை விடுக்கப்பட்டது.















# சிரேஷ்ட ஜனாதிபதி சட்டத்தரணி காமினி மாரப்பன காலமானார்



சிரேஷ்ட ஜனாதிபதி சட்டத்தரணி காமினி மாரப்பன தனது 83 ஆவது வயதில்நேற்று காலமானார்.

1965 ஆம் அண்டு சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்த மறைந்த காமினி மாரப்பன, 1990 ஆம் ஆண்டில் ஜனாதிபதி சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

அன்னார் கல்கிசை புனித தோமஸ் கல்லூரியின் பழைய மாணவராவார்.

ஸ்ரீ லங்கன் விமான சேவையின் பணிப்பாளராகவும், கொழும்பு துறைமுக நகர ஆணைக் குழுவின் முதலாவது தலைவராகவும் செயற்பட்ட அன்னார், தேசிய விளையாட்டுப் பேரவையின் தலைவராகவும் அவர் கடமையாற்றியுள்ளார்.

# அன்ஹால்ட் தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் நான்காவது தடவையாக சம்பியனானார் யுபுன்



ஜேர்மனியில் நடைபெற்ற அன்ஹால்ட் தடகள சம்பியன்ஷிப் போட்டியில் ஆடவருக்கான 100 மீற்றர் ஓட்டப்போட்டியில் இலங்கையின் யுபுன் அபேகோன் வென்றார்.

தூரத்தை 10.16 விநாடிகளில் நிறைவு செய்த அவர், இந்த வெற்றியை பதிவு செய்தார்.

முன்னதாக 2020, 2021, 2022 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற அன்ஹால்ட் தடகள சம்பியன்ஷிப் போட்டிகளில் ஆடவருக்கான 100 மீற்ற ஓட்டப்பந்தயத்தில் யுபுன் சாம்பியன்ஷிப் பட்டத்தை சுவீகரித்திருந்தார்.

இதனிடையே, 2024 பரா தடகள சாம்பியன்ஷிப் போட்டிகள் ஜப்பானின் கோபே நகரில் இடம்பெறுகின்றன.

இந்த போட்டியின் எப் 63 குண்டு எறிதல் போட்டியில் இலங்கையின் பாலித பண்டார பதக்கமொன்றை வென்றார்.

14.27 மீற்றர் தூரத்திற்கு குண்டை எறிந்து அவர் வெண்கலப் பதக்கத்தை சுவீகரித்தார்.

# சு.கவைத் தூய்மைப்படுத்தி வரும் தேர்தலில் வெல்வோம்

## விஜேதாஸ ராஜபக்ஷ நம்பிக்கை

ஊழல்வாதிகளை விரட்டி சிறிலங்கா சுதந்திரக் கட்சியை தூய்மைப்படுத்தி, எதிர்வரும் தேர்தலில் வெற்றி பெறுவோம் என கண்டியில் நடைபெற்ற நிகழ்வின் பின்னர் நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

அரசியல் கட்சியை நீதிமன்ற நடவடிக்கைகள் மூலம் கட்டுப்படுத்த முடியாது எனவும் சுதந்திரக் கட்சியில் 99 வீதமானோர் தமக்கு கட்சிப் பொறுப்பை வழங்கியுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

கட்சியைத் தூய்மைப்படுத்த வேண்டும் என்பதே அவர்களின் எதிர்பார்ப்பு எனவும் அவர் தெரிவித்தார்.

எதிர்காலத்தில் ஊழல்வாதிகளை கட்சியை விட்டு நீக்கி, தூய்மையான சுதந்திரக் கட்சியை கட்டியெழுப்புவார் எனவும் நீதிமன்ற உத்தரவு இருந்தாலும், எதிர்காலத்தில் தேர்த



லில் போட்டியிட்டு, வெற்றி பெறுவதற்காக செயற்படுகிறார் எனவும் விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

கட்சி தீர்மானித்தால், ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவேன் என்றும் அவர் குறிப்பிட்டார்.

# வெள்ள எச்சரிக்கை தொடர்ந்தும் நீடிப்பு

நாட்டில் நீர்நிலைகளின் நீர்மட்டம் அதிகரித்து வருவதாக நீர்பாசனத்திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி களனி கங்கை, களுகங்கை, நில்வளா கங்கை, தெதுறு ஓயா மற்றும் அத்தனுகலு ஓயா ஆகியவற்றின் நீர்மட்டம் அதிகரித்து வருவதாக அந்த திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதனையடுத்து தெதுறு ஓயா மற்றும் களு கங்கையை அண்மித்த தாழ்நிலப்பகுதிகளுக்கு விடுக்கப்பட்ட வெள்ள அபாய எச்சரிக்கை தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இது தொடர்பில் குறித்த பகுதிகளில் உள்ள மக்கள் அவதானத்துடன் செயற்படுமாறு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.







# வடக்கு மீனவர்களின் பிரச்சினைகள் நேற்று யாழ்ப்பாணத்தில் கலந்தாய்வு

வடமாகாண கடற்றொழிலாளர் எதிர்நோக்கும் பிரசினைகள் மற்றும் அரசினால் கொண்டுவரப்படவுள்ள மீன்பிடி சட்ட திருத்த வரைவு சம்பந்தமாக வடக்கின் நாடாளுமன்ற உறுப்பினர்களது ஆலோசனைகளையும் கருத்துக்களையும் கேட்டறியும் முகமாக கலந்துரையாடல் யாழில் உள்ள தனியார் விடுதியொன்றில் நேற்று இடம்பெற்றது.

வட மாகாண கடற்றொழிலாளர் இணையம் மற்றும் தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் இக்கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன் போது 10 கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டது.

வடமாகாணம்தின் நான்கு மாவட்ட மீனவ பிரதிநிதிகளும் தமது மாவட்டம் சார்ந்த பிரசினைகளை முன்வைத்தனர். தொடர்சியாக தமது பிரசினைகளை தமது சார்பில் நாடாளுமன்றில் பேச வேண்டும் என்ற கோரிக்கையும் மீனவ பிரதிநிதிகளால் முன்வைக்கப்பட்டது.

இதன் போது நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.சிறிதரன் மற்றும் செ.கஜேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர். எம்.ஏ.சுமந்திரன், செல்வம் அடைக்கலநாதன்,அங்கஜன் இராமநாதன் சார்பில் பிரதிநிதிகள் கலந்து கொண்டிருந்தனர்.





# மாமன் – மருமகன் மோதலைத் தடுக்கச் சென்ற மச்சான் கத்திக்குத்துக்கு இலக்காகி உயிரிழப்பு

தனது தந்தைக்கும் மச்சானுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலைத் தடுக்கச் சென்ற இளைஞர் கத்திக்குத்துக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் – தாவடி பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய வரதராசா நியூட்சன் எனும் இளைஞரே உயிரிழந்துள்ளார்.

கடந்த 2ஆம் திகதி மேற்படி இளைஞரின் தந்தைக்கும், இளைஞரின் அக்காவின் கணவருக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டு கைகலப்பாக மாறியுள்ளது.

அதனை அவதானித்த இளைஞர் இருவருக்கும் இடையிலான மோதலைத் தடுக்க முற்பட்ட வேளை அக்காவின் கணவரின் கத்திக்குத்துக்கு இலக்காகிப் படுகாயமடைந்துள்ளனர்.

படுகாயமடைந்த இளைஞர் அங்கிருந்து மீட்கப்பட்டு சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்றுமுன்தினம் (24) சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.



சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த சுன்னாகம் பொலிஸார் கத்திக்குத்துத் தாக்குதல் மேற்கொண்டவரைக் கைது செய்து மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்திய வேளை சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்று உத்தரவிட்டுள்ளது.








# இவ்வருடத்திற்குள் இளைஞர்களின் தொழில் பிரச்சினையைத் தீர்ப்போம்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதி

“இவ்வருடத்திற்குள் நாட்டை வங்குரோத்து நிலையிலிருந்து மீட்டு இளைஞர் யுவதிகளின் தொழில் பிரச்சினை தீர்க்கப்படும். மீண்டும் ஏற்றுமதிப் பொருளாதாரத்தை உருவாக்கும் வகையில் தனியார் நிறுவனங்களுடன் இணைந்து நவீன விவசாயத்தைக் கிராமத்திற்கு கொண்டுச் செல்வதற்கான வேலைத்திட்டம் அடுத்த வருடத்திலிருந்து ஆரம்பிக்கப்படும்.”

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்தார்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கத்தில் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த யாழ். மாவட்ட மாநாட்டிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

“வட. மகாணத்தில் பயன்படுத்தப்படாத பல காணிகள் காணப்படுகின்றன. யாழில் மாத்திரமின்றி முழு நாட்டிலும் அவ்வாறான பல காணிகள் காணப்படுகின்றன. அந்த இடங்கள் பயிர்ச்செய்கைக்கு பயன்படுத்தப்படவில்லை. கடந்த காலங்களில் எமது நாட்டில் விவசாய ஏற்றுமதி காணப்பட்டது. அநுராதபுர காலத்தில் இலங்கை நெல் ஏற்றுமதி செய்தது. பின்னர், தேயிலை, கோபி, இறப்பர், கறுவா உள்ளிட்டவைகளும் ஏற்றுமதி செய்யப்பட்டன. தற்போது அந்த ஏற்றுமதிச் செயற்பாடுகள் தடைப்பட்டுள்ளன.

அதனால், விவசாயத்தை நவீனமயப்படுத்தி ஏற்றுமதி பொருளாதாரத்தை மீண்டும் உருவாக்க வேண்டும். இளைஞர், யுவதிகள் விவசாயத்தில் ஈடுபடுவதற்கான வாய்ப்பை உருவாக்க வேண்டும். அரச மற்றும் தனியார் துறையுடன் இணைந்து நவீன விவசாயத்தை அறிமுகப்படுத்த எதிர்பார்க்கிறோம். அதனால் இலங்கை டொலர்களை ஈட்டிக்கொள்வதற்கான வாய்ப்பும் அதிகமாக கிடைக்கும். கடந்த வாரம் கேகாலைக்கான சுற்றுப் பயணம் ஒன்றை மேற்கொண்டிருந்தேன். அங்கு நவீன விவசாயச் செயற்பாடுகளை முன்னெடுப்போரைக்கா ண முடிந்தது. தற்போது அவ்வாறானவர்களே எமக்குத் தேவைப்படுகின்றனர்.

நவீன விவசாயத்தில் 5000 சதுர அடியில் உயர் வருமானத்தை பெற்றுக்கொள்ள முடியும். ஒரு ஹெக்டயாரில் 08 மெட்ரிக் தொன் நெல் விளைச்சலை பெற்றுக்கொள்ள முடியும். அதனால் ஏற்றுமதி மற்றும் வீழ்ச்சியடையாத பொருளாதாரத்தையும் கட்டமைக்க முடியும்.

அதேபோல், சுற்றுலாவர்த்தகத்தைபலப்படுத்துவது குறித்தும் அரசாங்கம் கவனம் செலுத்துகிறது. அதேபோல் வலுசக்தி குறித்தும் அதிக கவனம் செலுத்தப்படுகிறது. கிளிநொச்சி, மன்னார் மற்றும் யாழ்ப்பாணம் உள்ளிட்ட பகுதிகளில் காற்றின் மூலமான மின்சார உற்பத்தியை செய்வதற்கான சாத்தியங்களும் உள்ளன. அதனால் கிகாவோட் அளவிலான மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியும். குளங்கள் மீது சூரிய சக்தி படலத்தை அமைத்து அதனூடாக மின்சாரம் தயாரிப்பது தொடர்பிலும் கவனம் செலுத்துகிறோம்.

இதற்காக பூநகரி மற்றும் இரணைமடு குளங்களை பயன்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. வடமாகாணமானது அதிகளவில் புதுப்பிக்கத்தக்க வலுசக்தியை உற்பத்தி செய்யும் திறனைக் கொண்டிருக்கிறது.

மேலும், இந்தப் பகுதியில் 700 மெகாவோட் திறன் கொண்ட ஆசியாவின் மிகப்பெரிய சூரிய சக்திப் படலத்தை நிறுவும் பணியை மேற்கொள்ளவிருக்கிறோம். இதனை ஆரம்பமாகக் கொண்டு ஆசியாவின் மிகப்பெரிய புதுப்பிக்கத்தக்க வலுசக்தி மையமாக வடக்கை மாற்ற முடியும். வலுசக்தி துறையின் முன்னேறிச் செல்ல அதிகளவில் மின் உற்பத்தியை மேற்கொள்ள வேண்டியது அவசியம்.

எனவே, புதுப்பிக்கத்தக்க வலுசக்தி உற்பத்திக்காக இந்தியாவின் அதானி நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்துள்ளோம். காங்கேசன்துறை சீமெந்துக் கூட்டுத்தாபனத்தை மையமாக கொண்டு முதலீட்டு வலயம் ஒன்று நிறுவப்பட உள்ளது. மாங்குளம் பிரதேசத்தில் முதலீட்டு வலயமொன்றை ஸ்தாபிப்பதற்கும் எதிர்பார்க்கிறோம். மீனவர்களுக்காக நமது கடற்பரப்பை பாதுகாக்கும் பொறுப்பு எமக்கு உள்ளது. நவீன மீன்பிடி முறைகள் மூலம் மீன்பிடித் தொழில் துறையும் பலப்படுத்தப்படும்.

கடந்த நான்கு வருடங்களில் இலங்கையின் பொருளாதாரம் பாரிய பின்னடைவைச் சந்தித்துள்ளது. மக்கள் பெரும் அவதிப்பட்டனர். தற்போது நாடு வங்குரோத்து நிலையிலிருந்து மீண்டு வருகிறது. நாடு வங்குரோத்து நிலையிலிருந்து மீண்ட பிறகு, இளைஞர்களின் தொழில் இல்லாத பிரச்சினை நிவர்த்திக்கப்படும்.

பொருளாதார மாற்றச் சட்டமூலம் ஏற்கனவே நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டுள்ளது. ஏற்றுமதி சார்ந்த பொருளாதாரத்தை உருவாக்க எதிர்பார்த்திருக்கிறோம். வியட்நாம், மலேசியா, தாய்லாந்து போன்ற ஏற்றுமதி சார்ந்த பொருளாதாரம் இலங்கையிலும் கட்டியெழுப்பப்பட வேண்டும்.

மேலும், உங்கள் வேண்டுகோளுக்கு இணங்க இன்னும் இரண்டு மாதங்களில் தென்னிந்திய கலைஞர்களை கொண்டு யாழ்ப்பாணத்தில் மாபெரும் இசை நிகழ்ச்சியை ஏற்பாடு செய்யுமாறு தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தலைவருக்கு அறிவுறுத்தியிருக்கிறேன். வங்குரோத்து பொருளாதாரத்தில் இருந்து நாட்டை மீட்டெடுக்கவும், மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் அரசாங்கம் தொடர்ந்தும் அர்ப்பணிக்கும்.” – என்றார்.





## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
விக்கி, ரணில் இருவருமே கொழும்பு றோயல் கல்லூரிக்காரர்கள். அந்த இணைப்பு தங்களைக் கட்டி போடுவது போன்ற பாசப்பிணைப்பு என்ற மாதிரி அதனைத் தமது நரி தந்திரத்திற்கு பயன்படுத்தக் கூடியவர் ரணில். இந்த இணைப்பில் இணைய இன்னொருவருக்கு இடமுண்டு. அவர் சுமந்திரன். மூன்று பிரகிருதிகளுமே றோயல் கல்லூரி பழைய மாணவர்களே.

இவ்வளவு தூரம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க யாழ் வந்ததும், ஆரவாரம் பண்ணுவதும், விக்கியைத் தேடிச் சென்று சந்திப்பதும், எல்லாமுமே ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்துத்தான் என்பது அரசியல் அரிச்சுவடி படிப்பவருக்கும் தெரிந்த விடயமே.

ஆனால் நேற்று விக்கியை சந்தித்த போது தான் தேர்தலில் போட்டியிடுவது பற்றியோ, தனக்கு ஆதரவு வழங்குங்கள் என்றோ ரணில் ஒரு சொல் கூடப் பேசவே இல்லை. தடிப்புத்தான்.

தமிழ்ப் பொது வேட்பாளரை உங்களால் நிறுத்த முடியாது என்று சாரப்பட விக்கிக்கு திமிர்த்தனமாக கூறியிருக்கின்றார் ரணிலார்.

'உங்கள் பக்கத்தில் பலர் எனது பொக்கற்றில். அவர்கள் எப்படி பொது வேட்பாளருக்கு இணங்கி வருவார்கள்?' – என்ற கணக்கில்தான் ரணிலின் பேச்சுப் பாணி இருந்ததாம். அவர் (ரணில்) போட்ட கணக்கில் விக்கியும் தன் பக்கத்தில்தான் என்று அவர் கருதினாரோ என்னவோ.. ரணிலிடம் தான் கேட்க வேண்டும்.

இந்தச் சந்திப்பில் பேசப்பட்ட விடயங்கள் தொடர்பில் விக்னேஸ்வரன் கூறியவற்றை நோக்கும் போது 'வட்டுக்கோட்டைக்கு வழி கேட்டால் துட்டு ரெண்டு கொட்டைப்பாக்கு' என்ற பாணியில்தான் விக்கியின் அனுபவம் இருந்திருக்கும் போல.

அவர் (விக்கியர்) அதிகாரப் பரவலாக்கல் பற்றி பேச்செடுக்கும் போதெல்லாம் இவர்(ரணில்) அந்தப் பேச்சை வெட்டி அபிவிருத்தி பற்றியே பேசி இருக்கின்றார்.

அப்படியாயின், ஒன்று தெளிவு. அதிகார பகிர்வு குறித்து ரணிலுடன் இனிப் பேசி பயனில்லை என்பதுதான் அது.

அவர் தேர்தலில் குதித்தாலும் அதிகாரப் பகிர்வு தொடர்பில் புதிதாக எதையும் கூற மாட்டார். வடக்கு அபிவிருத்தி குறித்து மட்டுமே பேசுவார். 'கழுவுற மீனில் நழுவுற பாணியைத்தான்' கடைப்பிடிப்பார் என்பது பெரும்பாலும் தெளிவாகி வருகிறது.

13 ஆவது திருத்தத்தில் உள்ளவற்றை – அரசமைப்பில் இருப்பவற்றை – தருவேன் என்று சஜித் கூறுகின்றார் என்றுதான் செய்திகள் வெளியாகின. சஜித்துடன் தனிப்பட உரையாடிய தமிழ்த் தலைவர்களும் அப்படித்தான் கூறுகின்றனர்.

ஆனால்ரணிலோ, "இல்லை, இல்லை, சஜித்தும் அப்படிச் சொல்லவில்லை, அவரும் மைனஸ் பொலிஸ் மற்றும் காணி அதிகாரம் என்று தான் கூறுகிறார்" என விக்கியிடம் நேற்று அடித்துச் சொல்லியிருக்கின்றார்.

"நீங்களே ஒரு தடவை சஜித்திடம் நேரில் கேட்டுப்பாருங்கள்!" – என்று அட்வைஸ் வேறு கொடுத்திருக்கிறார் ரணில்.

அதையும் விக்னேஸ்வரனே சஜித்திடம் கேட்டுத் தமிழ் மக்களுக்கு தெளிவு படுத்தினால் நல்லது.

"ரணில் இப்படி என்னிடம் கூறினார். அது உண்மையா?" – என்று சஜித்திடம் விக்னேஸ்வரன் கேட்பது உசிதம் என்று நான் நினைக்கிறேன்.

தமிழ் மக்கள் வரும் ஜனாதிபதி தேர்தலில் ஒரு முடிவை எடுக்க இந்தக் கேள்விக்கான பதிலும் முக்கியம்தான்.

நீதியரசர் விக்னேஸ்வரனால் முடியாவிட்டால், சஜித் பிரேமதாஸவுடன் அருகில் நெருக்கமாக இருக்கும் மனோ கணேசனாவது இவ்விடயத்தில் சஜித்தின் நிலைப்பாட்டை வடக்கு, கிழக்குத் தமிழ் மக்களுக்கு கேட்டுத் தெளிவு படுத்தினால் நல்லது...!

---

## அனைத்துப் பிரச்சினை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
சபையொன்று ஸ்தாபிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

"தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளரை மாத்திரமே தற்போது தெரிவு செய்துள்ளோம். தேசிய மக்கள் சக்தி ஆட்சியில் பிரதமர் யார், வெளிவிவகார அமைச்சர் யார், அமைச்சரவைக்கு நியமிக்கப்படும் நபர்கள் தொடர்பில் இன்னமும் தீர்மானம் இல்லை. எனினும், அமைச்சரவையின் எண்ணிக்கை 25 ஆகவும், இராஜாங்க அமைச்சர்களின் எண்ணிக்கை 25 ஆகவும் காணப்படும்.

அமைச்சருக்கு ஆலோசனை வழங்கச் சபையொன்று நிறுவப்படும். அதில் துறைசார் நிபுணர்கள் இருப்பார்கள். அவர்களுக்குச் சம்பளம், சலுகைகள் வழங்கப்படமாட்டாது. அவர்கள் தன்னார்வ அடிப்படையில் சேவையாற்றுவார்கள்." – என்றார்.

---

## மதுபோதையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
மூவர் நேற்று கைது செய்யப்பட்டனர்.

வைத்தியசாலையில் நோயாளிகளைப் பார்வையிடும் நேரம் முடிந்த பின்னர் தம்மை உள்நுழைய அனுமதிக்குமாறு பாதுகாப்பு உத்தியோகத்தர்களுடன் முரண்பட்டுக் குழப்பத்தில் ஈடுபட்டவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

வைத்தியசாலை நிர்வாகம் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டை பதிவு செய்த நிலையில் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

அண்மைக்காலமாக யாழ்ப்பாணம் போதனாவைத்தியசாலைக்குள்நுழைந்து மதுபோதையில் குழப்பத்தில் ஈடுபடும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

---

## போர்க்குற்றவாளிக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
நாம் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தினத்தில் நினைவுகூருகின்றோம். தமக்கு இழைக்கப்பட்ட அநீதியின் வலியுடன் இன்னமும் வாழ்ந்துவரும் பாதிக்கப்பட்ட தரப்பினரையும், மீறல்களிலிருந்து தப்பிப்பிழைத்தோரையும், அவர்களது அன்புக்குரியவர்களையும் இவ்வேளையில் நினைவுகூருகின்றேன்.

அதேவேளை முள்ளிவாய்க்காலும், போரிலும் உயிரிழந்தவர்களை நினைவுகூருவதும் கடந்தகால மீறல்களுடன் தொடர்புடைய குற்றவாளிகளை நீதியின்முன் நிறுத்தவேண்டும் என்பதை நினைவுறுத்தும் அடையாளங்களாகப் பார்க்கப்படவேண்டும்.

இத்தகையதோர் நாளில் தமிழ் மக்களுக்கான நிலையான சமாதானம், நல்லிணக்கம் மற்றும் நிலையான அரசியல் தீர்வு என்பவற்றை நோக்கி தொழிற்கட்சி தொடர்ந்து இயங்கும் என உறுதியளிக்கின்றேன்." – என்றார்.

## தமிழர் தரப்பு ஒற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
நீண்ட நேரம் நடைபெற்ற இந்தச் சந்திப்பு தொடர்பில் விக்னேஸ்வரன் எம்.பி. ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில்,

"யாழ்ப்பாணம் வந்துள்ள ஜனாபதி இன்று (நேற்று) என்னை வந்து சந்தித்திருந்தார். அவர்வந்திருந்தகூட்டங்களுக்கே நான் போகவில்லை. இருந்தும் அவர் என்னை வந்து சந்தித்தமைக்கு என்ன காரணம் எனப் பலரும் நினைப்பார்கள்.

எனது உடல் நிலையை அறிந்துகொள்வதற்காகவே தான் வந்ததாக அவர் சொல்லியிருந்தார். அப்படியாகத்தான் சந்திப்பில் சில விடயங்கள் குறித்து பேசியிருந்தோம். இந்தச் சந்திப்பை அரசியல் சந்திப்பு எனச் சொல்ல முடியாது.

வடக்கு, கிழக்கு மக்களைப் பொருளாதார ரீதியாக முன்னேற்றுது சம்பந்தமாகத்தான் அவரது கருத்துக்கள் இருந்தன. ஆனால், அரசியல் ரீதியான விடயங்கள் என்று வருகின்றபோதும் கூட அதனையும் பொருளாதாரத்துக்குள்ளேயே கொண்டு செல்லப் பார்க்கின்றார்.

இதனைத் தொடர்ந்து ஜனாதிபதித் தேர்தலுக்கான தமிழ்ப் பொது வேட்பாளர் சம்பந்தமாகப் பேச்சு வந்தபோது நீங்கள் ஒரு பொது வேட்பாளரின் பெயரைத் தீர்மானிக்க முடியுமா என என்னிடம் அவர் கேட்டார். அதன் தொடராக உங்களால் அது முடியாது என்றவாறாகக் கதைத்தும் இருந்தார்.

அதாவது தமிழ் மக்கள் சேர்ந்து ஒருவரைப் பொது வேட்பாளராக நிறுத்தக் கூடிய ஒற்றுமை அல்லது ஒருமித்த தீர்மானத்தை எடுக்கக்கூடிய தகுதி, தகைமை இல்லை என்ற முறையில் அவர் பேசியிருந்தார்.

இவ்வாறு அவர் கூறியபோது நான் சிரித்துவிட்டு எனக்கு அதைப் பற்றி தெரியாது என்றும், அதற்கான குழுக்கள் யாரை நிறுத்துவது என்பது சம்பந்தமாகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்றும், அதனை அவர்கள்தான் தீர்மானித்து எங்களுக்குக் கூற வேண்டும் என்றும் கூறியிருந்தேன்.

பொது வேட்பாளருக்கு முதலாவது வாக்கு, மற்றைய இரண்டாவது, மூன்றாவது வாக்குகளை மற்றைய சிங்கள வேட்பாளர்களுக்கு அளிப்பதையும் அவர் வரவேற்றார். ஆனால், எங்களால் ஒரு பொது வேட்பாளரை நிறுத்த முடியாது என்பதுதான் அவருடைய ஒட்டுமொத்த எண்ணமாக இருந்தது.

அது எங்களுக்கு வெட்கக்கேடான ஒரு விடயம். அதை அவர் மனந்திறந்து சொல்லியிருந்தார்.

தான் இன்னுமொரு முறை ஜனாதிபதிப் பதவிக்கு வருவதென்றால் சிறுபான்மையினருடைய ஆதரவு தனக்குக் கட்டாயம் தேவை என்பதையும் அவர் ஏற்றுக் கொண்டார். ஆனால், சிறுபான்மையினர் அவரிடம் எதிர்பார்க்கின்ற பலதையும் நான் சுட்டிக்காட்டினேன். அதற்கு அவர் மாகாண சபைத் தேர்தலைக் கட்டாயம் நடத்தப் போகின்றார் என்றும், அதற்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தலையும், நாடாளுமன்றத் தேர்தலையும் நடத்தவுள்ளார் என்றும் கூறினார்.

மாகாணசபையிலும்மத்தியிலும்இருப்பவர்களைச் சேர்த்து என்னென்ன விடயங்கள் நடைபெற வேண்டும் என்றும், பொருளாதார ரீதியான விடயங்களை முன்னெடுப்பது சம்பந்தமாகவும் கதைத்தார்.

# வயலில் இருந்து சடலங்கள் மீட்பு



தொம்பே – மல்வான, மாயிவல பகுதியில் உள்ள வயல் ஒன்றில் இருந்து இருவரது சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

உயிரிழந்தவர்கள் ரம்பொடை, நாவலதென்னவத்தை பகுதியைச் சேர்ந்த 18 மற்றும் 29 வயதுடையவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அந்தப் பகுதியில் உள்ள வயலில் இரு சடலங்கள் உள்ளன எனப் பொலிஸாரின் 119 மற்றும் 118 ஆகிய அவசர தொலைபேசி இலக்கங்களுக்குக் கிடைக்கப்பெற்ற முறைப் பாட்டை அடுத்து, மேற்படி சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

உயிரிழந்த இருவரும் கடந்த 22 ஆம் திகதி தாம் தங்கி யிருந்த விடுதியில் இருந்து வெளியேறிய நிலையில், மீண் டும் விடுதிக்குத் திரும்பியிருக்கவில்லை என அந்த விடுதி யில் தங்கியிருந்த ஒருவரால் பொலிஸில் முறைப்பாடு செய் யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# வயோதிபப் பெண் வழுக்கி வீழ்ந்து பலி

கம்பளை, புப்புரஸ்ஸ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஜீ.கே. பிரிவு தோட்டத்தில் மரத்திலான பாலத்திலிருந்து வழுக்கி வீழ்ந்து வயோதிபப் பெண்ணொருவர் உயிரிழந்துள் ளார்.

78 வயதான மலயாண்டி காளியம்மா என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த பாலம் சில வருடங்களுக்கு முன்னர், மழை காரணமாக இரண்டாக உடைந்து போன நிலையில் இருந்தது. இதனால் மக்கள் குடியிருப்பு பகுதிகளுக்கு செல்ல முடியாத நிலை காணப்பட்டது.

இந்நிலையில் மக்கள் இணைந்து, மரம், கம்பு உள்ளிட்ட வற்றைப் பயன்படுத்தி சிறிய மர பாலம் ஒன்றை அமைத் தனர். தற்போது வரை அதிலேயே பயணித்து வருகின்ற னர்.

உயிரிழந்த பெண் நேற்றுக் காலை பாலத்தைக் கடந்து வியாபார நிலையத்துக்குச் சென்று பொருட்களை வாங்கிக் கொண்டு வீட்டுக்கு திரும்பி வந்துபோது பாலத்தைக் கடந்து வந்த நிலையில் பாலத்தில் இருந்து வழுக்கி ஓடையில் வீழ்ந்த நிலையில் மரமாகியுள்ளனர்,

இந்தப் பாலத்தைச் செய்து தருமாறு பல அரசியல் மற்றும் அரச அதிகாரிகளுக்கு தெரிவித்து இருந்தாலும் இது வரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று மக்கள் தெரிவிக்கின்றனர்.

## தமிழர் தரப்பு ஒற்று...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி...)

13 ஆவது திருத்தச் சட்டம் சம்பந்தமாக நான் சிலவற்றைக் கூறினேன். அதாவது 13ஆவது திருத்தத்தில் பொலிஸ் அதி காரம் இல்லாமல்தான் 13 பற்றி நீங்கள் கூறினீர்கள், ஆனால் சஜித் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்து வேன் என்று கூறியிருக்கின்றார். எமது மக்களைப் பொறுத்தவரையுல் அந்த வேற்றுமை உங்களுக்குப் பாதிப்பை ஏற் படுத்தும் என்று கூறினேன்.

"அப்படியில்லை. 13 பற்றி சஜித் கூறும் போது கூட 13 இல் பொலிஸ் அதிகாரத்தை உள்ளடக்கவில்லை. அப்படி 13 ஆவதை முழுமையாக அமுல்படுத்துவது உங்கள் நிலைப்பாடு எனில், அதனை சஜித்திடமே நேரடியாகச் சென்று கேளுங்கள்." – என்று ஜனாதிபதி கூறினார்.

ஆக இது சம்பந்தமாக இருவருக்கும் (ரணில், சஜித்) இடையில் என்ன நடக்கின் றது என்றே எனக்குத் தெரியவில்லலை. ஆக மொத்தத்தில் இவர்கள் எல்லோரும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள் போல் தான் எனக்குத் தெரிகின்றது.

அரசியல் ரீதியான ஒரு முன்னேற் றத்தை நாங்கள் பெறக் கூடாது, எங்களை நாங்கள் வலுவாக்கும் நடவடிக்கைக ளில் இறங்கக்கூடாது என்பது போன்ற சிந்தனையில் ஜனாதிபதி உறுதியாக இருக்கின்றார். அவரைப் போலவே தெற்கிலுள்ள மற்றையவர்களும் உறுதி யாகவே உள்ளனர்.

இதன் காரணமாகத்தான் ஒரு தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்த வேண்டும் என்பதில் உறுதியாக உள்ளோம். ஏனென் றால் தமிழ் மக்களுக்கு இவர்கள் கொடுக் கும் வாக்குறுதிகள், தேர்தல் முடிந்தவுடன் காற்றில் பறக்கப் போகின்றவை என்பது தெரியும்.

ஆகவே, இந்த நிலை மாற வேண்டும், எங்களது நிலையை வெளிப்படுத்த வேண்டும் என்பதற்காகத் தான் பொது வேட்பாளரை நிறுத்துகின்றோம். ஆனா லும், எங்களுடைய தமிழ் மக்கள் மத்தியி லும் சில சந்தேகங்கள், குழப்பங்கள் இருக் கின்றன.

ஆனால், அதனைத் தீர்த்துக் கொண்டு பொது வேட்பாளரை நிறுத்தும் பணியை முன்னெடுத்துச் செல்வோம். அதனால் பல நன்மைகள் எங்களுக்கு இருக்கின் றன. குறிப்பாக புலத்திலும் தாயகத்தி லும் உள்ள எங்கள் மக்களிடத்தே ஒற் றுமையை நாங்கள் கொண்டு வர முடியும். எங்களுக்கு என்ன வேண்டும் என்பது சம்பந்தமாக சர்வதேச ரீதியாகத் தமிழ் மக்களள் தங்கள் நிலைப்பாடு, தீர்ப்பை வெளிப்படுத்த முடியும்.

இலட்சக்கணக்கில் தமிழ் மக்கள் இந்த ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பளரை ஆதரித்தால் அது உலகத்துக்கு எங்களு டைய மனோநிலையை, அபிலாஷை களை வெளிக்கொணர்வதாக இருக்கும்.

இது மிக முக்கியமானதொன்று. ஆனால், அவர் இதனைச் சிரிப்போடு கடந்து சென்றுவிட்டார்.

வடக்கு, கிழக்கு தனித்துவம் பற்றி தனி யாக அவர் எதனையும் கூறவில்லை. இது இவர் மட்டுமல்ல எல்லா சிங்கள அரசியல் வாதிகளும் அப்படித்தான். ஆகவே, எங் களைப் பொருளாதார ரீதியாக மேம்படுத்த பல திட்டங்கள் இருப்பதாக நான் கூறி னேன்." – என்றார்.


VACANCY
For Website & YouTube Media
Male / Female

- VJ (Video Jockey)
- Photographer
- Graphic Designer
- Editor
- Typist - English & Tamil

Qualification -
Minimum 2 Years Experience
G.C.E. A/L or Relevant Media Qualifications
Fluency in Computer Knowledge
Send your CV to mail before you contact
CONTACT - 0777 739 185
Email - lankamedianews@gmail.com

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# தேர்தல் முறைகேடு ஆரம்பம்

அரசமைப்புச் சட்டத்தின் பிரகாரம் இன்னும் 114 நாள்கள் முதல் 145 நாள்களுக்குள் அடுத்த ஜனாதிபதி தேர்தலை நடத்தியாக வேண்டும்.

ஆனால் பிரதான ஆளுங் கட்சியான சிறிலங்கா பொதுஜன பெரமுன தரப்பில் யார் வேட்பாளர் என்பது இன்னும் முடிவாகவில்லை. தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அடுத்த முறை ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவார் என்பதை அவர் இன்னமுமே உறுதிப்படுத்தவில்லை. அவரே குழப்பத்தில்தான் - தெளிவற்ற நிலையில்தான் - இன்னும் இருக்கின்றார்.

அவரது காவடிகள் - செம்பு காவிகள் - அவர் மீண்டும் களத்தில் இறங்குவார் எனக் கோஷமிட்டுத் திரிந்தாலும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதை உறுதிப்படுத்துகிறார் இல்லை. அரசியல் சீட்டாட்டத்தில் தமது சீட்டுகளைத் தமது நெஞ்சுக்கு நெருக்கமாக வைத்துத் தனது துரும்புகளை காட்டாமலேயே விளையாட விரும்புகிறார் அவர். ஆனால் நீண்ட காலத்துக்கு இப்படியே அவர் மறைத்து விளையாட முடியாது.

இன்னும் மூன்றரை முதல் நான்கு மாத காலத்துக்குள் ஜனாதிபதித் தேர்தல் நடந்து முடிந்து விடும்.

தேர்தல் களத்தில் இறங்காமல் பின்னடிக்கும் தடுமாற்றமே - கடைசிவரை ஒளித்துப் பிடித்து விளையாடும் தந்திரமே - இந்தத் தேர்தலில் அவரது பலவீனத்தைக் காட்டிக் கொடுத்து விடும். அம்பலப்படுத்தி விடும்.

அவர் அம்சடக்காக இருந்தாலும், அவரைச் சூழவிருப்போர் அவர் தேர்தலில் போட்டியிடுகின்றமை உறுதி என்ற கணக்கில் தான் செயற்படுகின்றனர். பிரச்சாரங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

அரசு நிகழ்ச்சிகளைக் கூட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு திரட்டும் பிரசார மேடையாக்கும் அவர்களின் சிறுமைத்தனம் அதனையே காட்டி நிற்கின்றது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பங்குபற்றிய கூட்டத்திலேயே, இப்படி அரசு நிகழ்வை தேர்தல் பிரச்சார மேடையாக்காதீர்கள் என்று வெளிப்படையாகச் சுட்டிக்காட்டும் அளவுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலந்து கொண்ட கூட்டங்களில் அவரது எடுபிடிகள் பீற்றித் திரிகின்றனர் என்பது வெட்ட வெளிச்சமாகி உள்ளது.

ஏற்கனவே, உள்ளூராட்சி சபைகள் ஒவ்வொன்றுக்கும் ஒரு கோடி ரூபாவுக்குக் குறையாமல் ஒதுக்கீடு என்ற அடிப்படையில் 341 உள்ளூராட்சி மன்றப் பிரதேசங்களுக்கும் ‘அவசர அபிவிருத்தி வேலைகளுக்கு’ என்ற பெயரில் 1,400 கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஊராட்சி மன்றப் பிரதேசங்களில் இருந்து தெரிவு செய்யப்படும் நபர்கள் சிலர் மூலம் இந்தத் திட்டங்களை நடைமுறைப்படுத்தவும், கண்காணிக்கவும், முன்னெடுக்கவும் திட்டமிடப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டு வேலைகளும் ஆரம்பித்து விட்டன.

அமைச்சர்கள், ஆளும் கட்சியினரின் ஆள்களே இந்தப் பொறுப்புக்களுக்கு தெரிவு செய்யப்படுகின்றனர். ஆளுங் கட்சி தரப்பினர்களுக்கு அரசு நிதியை கொண்டு திட்டங்களைச் செயற்படுத்தும் உரிமைகளைக் கொடுத்து, தேர்தல் சமயத்தில் வாக்குச் சுருட்டும் தந்திரம் இது என்று இந்தத் திட்டத்தை தேர்தல் ஆணையம் கடுமையாக ஆட்சேபித்திருக்கின்றது. அதையும் மீறி இத்திட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

தேர்தல் வெற்றிக்காக எந்த முறைகேட்டுக்கும் ஆளுந்தரப்பு பின்னிற்காது என்பதை இந்தப் போக்கு உறுதிப்படுத்துகிறது.

அரசு நிகழ்வுகளை தேர்தல் பிரச்சார மேடையாக்கி, அதன் மூலம் முறையற்ற வகையில் வாக்குத் திரட்டுவது கூட தேர்தல் விதிமுறை மீறல்தான்.

தேர்தல் வெற்றி என்ற ஒரே இலக்குக்காக எந்த எல்லை வரை சென்றும் அதைச் செய்வதற்கு ஆளும் தரப்பு தயாராக இருக்கின்றது என்பதைத்தான் அதன் போக்குகள், ஏற்பாடுகள் நிரூபித்து நிற்கின்றன.

தமது தேர்தல் வெற்றிக்காக ரணில் இதுவும் செய்வார், எதுவும் செய்வார்...!

# குஜராத்தில் சிறுவர் விளையாட்டு மையத்தில் தீ விபத்து; குழந்தைகள் உள்பட 24 பேர் பலி



குஜராத் மாநிலம் ராஜ்கோட்டில் உள்ள சிறார் விளையாட்டு மையத்தில் நேற்று ஏற்பட்ட பாரிய தீ விபத்தில் 12 குழந்தைகள் உள்பட 24 பேர் உயிரிழந்துள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். தீயணைப்பு வீரர்கள் தீவிரமாக மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

குஜராத் மாநிலம் ராஜ்கோட் நகரில் உள்ள வணிக வளாகப் பகுதியில் சிறுவர்களுக்கென பிரத்யேகமான டி.ஆர்.பி. விளையாட்டு மையம் செயல்பட்டு வந்தது. இங்குள்ள தற்காலிக அமைப்பு ஒன்றில் நேற்று மாலை 5 மணி அளவில் திடீரென தீ விபத்து ஏற்பட்டது. இதனால் அந்தப் பகுதியே புகை மண்டலம் ஆனது.

இந்த விபத்து தொடர்பில் அறிந்த தீயணைப்பு வீரர்கள் உடனடியாக சம்பவ இடத்துக்கு சென்று தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர். கோடை விடுமுறையை முன்னிட்டு ஏராளமான சிறுவர், சிறுமிகள் சென்றதால், அவர்களில் பலர் இதில் சிக்கியிருக்கலாம் என அஞ்சப்பட்டது.

இது குறித்து ராஜ்கோட் நகராட்சி ஆணையர் ஆனந்த படேல் கூறுகையில், “மீட்புப் பணி முடிந்த பின்னரே முழு விவரம் தெரியவரும்” என்றார்.

மீட்பு பணிகள் முழுவீச்சில் முடுக்கிவிடப்பட்டுள்ளன. இந்த தீ விபத்துக்கான காரணம் குறித்து தகவல் வெளியாகவில்லை.

இது தொடர்பாக முதல்வர் பூபேந்திர படேல் தனது ட்விட்டர் பக்கத்தில் வெளியிட்ட தகவலில்,

“ராஜ்கோட்டில் உள்ள விளையாட்டு மையத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கியிருப்பவர்களை மீட்கும் பணி நடைபெற்று வருகிறது. இது தொடர்பான அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.” என தெரிவித்துள்ளார்.

இராஜ்கோட் பொலிஸ் ஆணையாளர் ராஜு பார்கவ் நேற்று இரவு செய்தியாளர்களிடம் கூறுகையில்,

“தீ விபத்துக்கான காரணம் குறித்து விசாரிக்கப்படும். நகரின் அனைத்து விளையாட்டு மையங்களையும் மூடுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.” – என்றார்.

இந்த நிலையில், இந்த பயங்கர தீ விபத்தில் 12 குழந்தைகள்உள்பட24பேர்உயிரிழந்துள்ளனர்எனவும்காயமடைந்தவரும் அருகிலுள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக ராஜ்கோட் ஆட்சியர் பிரபாவ் ஜோஷி கூறுகையில்,

“விளையாட்டு மையத்தில் ஏற்பட்ட தீ விபத்து குறித்து தீயணைப்பு கட்டுப்பாட்டு அறைக்கு மாலை 4:30 மணியளவில் அழைப்புவந்தது.தீயணைப்புவாகனங்கள்மற்றும்ஆம்புலன்ஸ்கள் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்தன. தீயணைப்பு வீரர்கள் தீயை அணைத்தனர்.” – என்றார்.

# கடவுள் தான் என்னை பூமிக்கு அனுப்பினார்

## பிரதமர் மோடி தெரிவிப்பு



இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தன்னை கடவுள் தான் பூமிக்கு அனுப்பினார் என தெரிவித்துள்ளார்.

தொலைக்காட்சி ஒன்றிற்கு வழங்கிய நேர்காணலில் அவர் இவ்வாறு பல்வேறு விடயங்களைக் கூறியுள்ளார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

“என் தாயார் உயிரோடு இருக்கும்வரை, இந்த உலகிற்கு என் தாய் மூலம் தான் வந்தேன் என நம்பிக்கொண்டிருந்தேன். ஆனால், என் தாயாரின் மரணத்திற்குப் பின்னர் நான் பலவற்றைச் சிந்தித்துப் பார்த்தேன்.

இப்போது நான் அதனை ஏற்றுக்கொள்ளவும் செய்கிறேன். சிலர் என்னை பைத்தியம் என்று அழைக்கலாம். ஆனால், கடவுள் என்னை ஒரு நோக்கத்திற்காகத் தான் பூமிக்கு அனுப்பினார் என்று உறுதியாக நம்புகிறேன். சிலர் இதற்கு எதிராகப் பேசலாம்.

இந்தியாவை முன்னோக்கிக் கொண்டு செல்ல, எதிர்க்கட்சித் தலைவர்களுடன் இணைந்து பணியாற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளேன்.

என்னை இந்த உலகிற்கு அனுப்பியது பரமாத்மாதான். உயிரியல் ரீதியாக நான் பிறந்திருக்க வாய்ப்பில்லை.

ஏதோவொரு விடயத்தை நடத்தியே ஆக வேண்டும் என்பதற்காகத் தான் கடவுள் என்னை இந்த பூமிக்கு அனுப்பியிருக்கிறார்.” – என்றார்.




# அமெரிக்க பல்கலைக்கழகம் அருகில் துப்பாக்கிச் சூடு; இருவர் உயிரிழப்பு

அமெரிக்காவின் பிராங்க்ஸ் பல்கலைக்கழகத்திற்கு அருகில் துப்பாக்கிச் சூடு ஒன்று இடம்பெற்றுள்ளது.

இதன்போது, இருவர் பலியாகியுள்ளனர். இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்த சம்பவமானது நேற்று முன்தினம் பார்மொடன் – ஹைட்ஸ் பகுதியில் உள்ள டேவிட்சன் அவென்யூவில் இடம்பெற்றுள்ளது.


சம்பவத்தில் 36 வயதுடைய ஆணொருவரும் 44 வயதுடைய பெண்ணொருவரும் உயிரிழந்துள்ளனர்.

இந்த சம்பவத்தில் காயமடைந்த இருவர் சிகிச்சைகளுக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கறுப்பு உடை அணிந்திருந்த இரண்டு மர்ம நபர்கள் இந்த துப்பாக்கிச் சூட்டை நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இவர்கள் இருவரை தேடும் பணியை பொலிஸார் தீவிரப்படுத்தியுள்ளனர். பல்கலைக்கழகத்தின் அருகில் நடத்த இந்த துப்பாக்கிச் சூடு சம்பவத்தால் அப்பகுதியில் பரபரப்பான சூழல் நிலவுகிறது.

# அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பலின் சிதைவு 80 ஆண்டுகளுக்குப் பின் கண்டுபிடிப்பு

2 ஆம் உலகப் போரில் ஜப்பானின் பல போர்க் கப்பல்களை மூழ்கடித்த அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பலின் சிதைவு 80 ஆண்டுகளுக்குப் பின்னர் தென் சீனக் கடற்பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

'யு.எஸ்.எஸ் ஹார்டர்' என்ற இந்த கப்பல் எதிரிப் படைகளால் மூழ்கடிக்கப்பட்டது.

பிலிப்பைன்ஸின் வடக்கு தீவான லூஸானை ஒட்டிய கடற்பகுதியில் 3 ஆயிரம் அடிக்குக் கீழே இந்த நீர்மூழ்கிக் கப்பலின் சிதைவு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

1944 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 29ஆம் திகதி 79 பேருடன் 'ஹார்டர்' கப்பல் மூழ்கடிக்கப்பட்டது.

2 ஆம் உலகப் போரின் போது, 'ஹார்டர்' 4 நாள்களில் 3 ஜப்பானியப் போர்க் கப்பல்களை மூழ்கடித்ததாகவும், 2 கப்பல்களைப் பெருஞ் சேதத்திற்கு உள்ளாக்கியதாகவும் அமெரிக்கக் கடற்படை தெரிவிக்கின்றது.

# தென் கொரியாவில் நித்திரைப் போட்டி





தென் கொரியாவில் நடத்தப்பட்ட நித்திரைப் போட்டியில் ஏராளமான மக்கள் பங்கேற்றுள்ளனர்.

தூக்கத்தின் முக்கியத்துவத்தை உணர்த்துவதற்காக இந்த போட்டி நடத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்போது போட்டியில் பங்கேற்றவர்களுக்கு பல்வேறு இடையூறுகள் விளைவிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் போட்டியாளர்களின் இதயத்துடிப்பைக் கணக்கிட்டு அதன்படி வெற்றியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.



# போரினால் காணிகளை இழந்த மக்கள் மீண்டும் காணிகளை இழக்கக் கூடாது

## கிளிநொச்சியில் ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

“போரினால் காணிகளை இழந்தவர்கள் பெரும்பாலானோர் இருக்கின்றனர். தற்போது கிடைக்கும் காணிகளை இழந்து விடக் கூடாது. நீங்கள் இந்தக் காணிகளில் விவசாயம் செய்து. வீடுகளைக் கட்டி அவற்றை உங்களுக்குப் பின்னர் உங்கள் பிள்ளைகளுக்கு வழங்குகள்.”

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கருதிட்டத்தின் பேரில் நடைமுறைப்படுத்தப்படும் சிக்கலற்றவகையில் பூரண காணி உரிமையை அனைவருக்கும் வழங்கும் “உறுமய” வேலைத்திட்டத்தின் கிளிநொச்சி மாவட்ட நிகழ்ச்சி நேற்று முற்பகல் இரணைமடு நெலும் பியச மண்டபத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இடம்பெற்றது.

கிளிநொச்சி மாவட்டத்தின் 4 பிரதேச செயலகப் பிரிவுகளை உள்ளடக்கிய 1,700 முழு உரிமையுடைய காணி உறுதிப்பத்திரங்கள் இங்கு வழங்கப்பட்டன. அடையாள ரீதியாக சில உறுதிப் பத்திரங்கள் ஜனாதிபதியினால் வழங்கி வைக்கப்பட்டன.

இதன்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உரையாற்றுகையில் –

“நான் மேடைக்கு வர முன்னர் மேடையில் அற்புதமான நடனமொன்று அரங்கேற்றப்பட்டது.

விவசாயிகளின் பெருமையை அவர்கள் அந்த நடனத்தில் எடுத்திக் காட்டியிருந்தார்கள். கிளிநொச்சி பிள்ளைகளிடம் இருக்கும் விசேட திறமையைக் கண்டோம். அவர்களை நாம் ஊக்குவிக்கவேண்டும். கிளிநொச்சி நகரம் துரிதமாக வளர்ந்து வருகிறது. மாகாண சபைகளின் கலாச்சார பிரிவுகளுடன் கலந்துரையாடி இவர்களுக்கு எவ்வாறு உதவ முடியும் என்று கலந்துரையாடவுள்ளேன்.

நேற்று யாழில் இடம்பெற்ற இசை நிகழ்ச்சியில் சிறந்த பாடல்களை செவிமடுத்தேன். நீண்ட காலத்தின் பின்னர் இவ்வாறு சிறந்த பாடல்களைக் கேட்டேன். தென் இந்தியாவில் இருந்து இசைக்குழுவொன்றை அழைத்துவந்து யாழ்ப்பாணத்தில் இசை நிகழ்ச்சியொன்றை நடத்துமாறு இளைஞர் சேவை மன்றத்திடம் கோரிக்கை விடுத்தேன். அதில் நீங்களும் கலந்து மகிழ முடியும்.

தற்போது மக்களுக்கு காணி உறுதிப் பத்திரங்களை வழங்க இங்கு கூடியுள்ளோம். இந்த உறுதிகளை வழங்க முன்னர் மாகாண ஆளுநர்களின் அனுமதியைப் பெற்றுக் கொண்டோம்.

வெள்ளையர்கள் உருவாக்கிய சட்டத்தின் அடிப்படையில் இந்த காணிகள் வழங்கப்படுகின்றன.

வெள்ளையர்கள் இந்தக் காணிகளைப் பாதுகாத்தனர். நீங்களும் இந்தக் காணிகளைப் பாதுக்க வேண்டும். இந்த விடயம் தொடர்பாக ஆராய்வதற்கு நாடாளுமன்ற குழுக்கும் பணிப்புரை விடுக்கவுள்ளேன். உண்மையில் இந்த காணி




உரிமைகள் மக்களுக்கு கிடைக்க வேண்டும். எமது விவசாயிகள் அரிசியல் தன்னிறைவு அடைந்த நாட்டை உருவாக்கியுள்ளார்கள்.

2003 ஆம் ஆண்டு நான் பிரதமாக இருந்தபோது அரிசியில் தன்னிறைவு அடைந்தோம். அதற்கு முன்னர் இந்த நிலைமை இருக்கவில்லை. அப்போது வன்னிப் பிரதேசம் புலிகள் கட்டுப்பாட்டில் இருந்தது. போர் நிறுத்த ஒப்பந்தம் செய்துகொண்ட பின்னர் உரம் அனுப்புவது குறித்து ஆராய்ந்தோம். உரத்தைப் பயன்படுத்தி ஆயுதங்களைத் தயாரிக்கக் கூடும் என்ற அச்சம் இருந்தது. இதுகுறித்து உயர் இராணுவ அதிகாரிகளுடன் கலந்துரையாடினோம்.

யுத்த நிறுத்தம் ஏற்படுத்தப்பட்ட பின்னர் வன்னிப் பிரதேசத்திற்கு உரத்தை வழங்கினோம். 2003 ஆம் ஆண்டு அரிசி உற்பத்தியில் இலங்கை தன்னிறைவு பெற்றது. அரிசி உற்பத்தியில் தன்னிறைவு அடைந்ததில் வன்னி, அநுராதபுரம், பொலன்னறுவ மாவட்டங்களுக்கு பெரும் பங்கு இருக்கிறது.

தற்போது சிலருக்கு காணி உரிமை கிடைத்துள்ளது. விவசாயக் காணி உரிமை கிடைக்கிறது. நவீன விவசாயத்தை அறிமுகப்படுத்தவுள்ளோம். இதனைப் பயன்படுத்தி, போட்டித் தன்மைமிக்க விவசாயத்துறையை ஏற்படுத்த முடியும் என்று நம்புகிறேன். இதன்மூலம் விவசாயத்துறை வளர்ச்சி பெறும். உலக சனத் தொகையும் அதிகரித்து வருகிறது. இதன்மூலம் அதிகரித்து வரும் சனத் தொகைக்கு எங்களுக்கு உணவளிக்கமுடியும். தற்போது நாம் முன்னெடுத்துள்ள வேலைத் திட்டத்தில் வன்னிக்கு மிகப் பெரிய வகிபாகம் இருக்கிறது.

உங்களின் காணிகளை நீங்கள் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். போரினால் காணிகளை இழந்தவர்கள் பெரும்பாலானோர் இருக்கின்றனர். தற்போது கிடைக்கும் காணிகளை இழந்துவிடக் கூடாது. நீங்கள் இந்தக் காணிகளில் விவசாயம் செய்து. வீடுகளைக் கட்டி, அவற்றை உங்களுக்குப் பின்னர் உங்கள் பிள்ளைகளுக்கு வழங்குகள். இந்த பொறுப்பு உங்களுக்கு இருக்கிறது. இதனை நீங்கள் செய்ய வேண்டும்.”

– என்றார்.








# ‘தூய்மையான அரசியலுக்காக ஒன்றிணைதல்’ மன்னாரில் நேற்று பல தரப்பினர் கலந்தாய்வு

(மன்னார் நிருபர்: எஸ்.ஆர்.லெம்பேட்)

“தூய்மையான அரசியலுக்காக ஒன்றிணைவோம்!“ எனும் தொனிப்பொருளில் பவ்ரல் அமைப்பு, மார்ச் 12 இயக்கத்துடன் இணைந்து ஏற்பாடு செய்த மக்கள் மேடை நிகழ்வு நேற்றைய தினம் சனிக்கிழமை காலை மன்னாரில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் இடம் பெற்றது.

மார்ச் 12 இயக்கத்தின் மாவட்ட தலைவர் கொன்ஸால் வாஸ் தயாளராஜன் தலைமையில் இடம்பெற்ற இந்த மக்கள் மேடை நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் கட்சிகள், பொது மற்றும் சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகிய தரப்புகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

இதன் போது வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன் மற்றும் எஸ்.வினோநோகராதலிங்கம் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் பிரதிநிதிகள் மற்றும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் பொது மற்றும் சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள், மதத் தலைவர்கள், இளைஞர், யுவதிகள், சமூக மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதன் போது மன்னார் மாவட்டத்தில் உள்ள பல்வேறு பிரச்சினைகள் குறித்து அரசியல் பிரதிநிதிகளின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது.

மேலும் மாவட்டத்தில் தூய்மையான அரசியல் கலாச்சாரத்தை உருவாக்குதல் உள்ளிட்ட விஷயங்கள் குறித்தும் கருத்துக்கள் முன் வைக்கப்பட்டன.

குறிப்பாக மன்னார் மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டு வரும் காற்றாலை மின் உற்பத்தி மற்றும் கனிய மண் அகழ்வு பிரச்சினைகள் குறித்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் மௌனம் காப்பது குறித்து மக்களினால் கருத்துக்கள் முன் வைக்கப்பட்டன.

மாவட்டத்தில் தொடர்ச்சியாக பல்வேறு பிரச்சினைகள் நீடித்து வருகின்ற நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசியல் கட்சிகள் ஓரணியில் செயல்பட்டு மன்னார் மாவட்டத்தில் உள்ள பிரச்சினைகளை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டது.













# தமிழ்த் தேசியத்தின் வீழ்ச்சிக்கு யாழ்.மையவாத சிந்தை காரணமாகக் கூடாது!






கருணா அம்மான் என்கிற விநாயகமூர்த்தி முரளிதரன், கடந்த பொதுத் தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் போட்டியிட்ட போது, வாக்குகள் பிரிந்து தமிழர் பிரதிநிதித்துவம் இழக்கப்படும் என்று பல தரப்புக்களினாலும் எச்சரிக்கப்பட்டது. தேர்தல் முடிவிலும் அது பிரதிபலித்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தனக்குக் கிடைத்த ஒரேயொரு தேசியப் பட்டியல் உறுப்பினர் பதவியை, தவராசா கலையரசனுக்கு வழங்கி அம்பாறைக்கான தமிழர் பிரதிநிதித்துவ வெற்றிடத்தை நிவர்த்தி செய்தது. ஆனால், கருணா அம்மானின் அம்பாறைக்கான வருகையை அன்று கணிசமான மக்கள் ஆதரித்தார்கள். புத்திஜீவிகளும், இளைஞர்களும், சமூகத்தில் ஆளுமை செலுத்துவோரும் கருணாவின் கடந்த கால வரலாற்றைப் புறந்தள்ளி, அவருக்கு ஆதரவளித்தார்கள். குறிப்பாக, அம்பாறையில் இருந்து புலம்பெயர்ந்துள்ளவர்களில், குறிப்பிட்டளவானோர் கருணாவின் வெற்றியை சாத்தியப்படுத்தும் நோக்கில் பிரச்சாரத்துக்கான நிதிப்பங்களிப்பைக் கூட செய்திருக்கிறார்கள். தமிழ்த் தேசிய சிந்தனைகளில் இருந்து எந்தவொரு தருணத்திலும் தடம்புரளாத அம்பாறை தமிழ் மக்கள் ஏன் கருணாவை ஆதரிக்க வேண்டி வந்தது? அதன் பின்னணி தொடர்பில் அம்பாறையில் தோல்வியடைந்த தமிழ்த் தேசியக் கட்சிகள் எவையும் ஆராயவும் இல்லை. அதுகுறித்து பேசவும் இல்லை. மாறாக, கருணா வாக்கினைப் பிரித்தார். அதனால் தோல்வியடைந்தோம் என்ற அளவில் விடயத்தைக் கடந்து விட்டார்கள்.



புருஜோத்தமன் தங்கமயில்

கடந்த பொதுத் தேர்தலில் அகில இலங்கை தமிழர் மகா சபைக் கட்சியில் போட்டியிட்ட கருணா அணியினர், 29,379 வாக்குகளைப் பெற்றனர். கூட்டமைப்பு சுமார் நான்காயிரம் வாக்குகள் பின்னடைவோடு, 25,255 வாக்குகளையே பெற்றது. 2015ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் கூட்டமைப்பு 45,421 வாக்குகளை அம்பாறையில் பெற்றது. இதன்மூலம் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் வெற்றி பெற்றார். ஆனால், 2020ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில், கூட்டமைப்பு 20,000 வாக்குகளை கருணாவிடம் இழந்தது. அத்தோடு, கருணாவால் சுமார் 10,000 பேரை மேலதிகமாக வாக்களிக்க அழைத்துவர முடிந்திருந்தது. கடந்த பொதுத் தேர்தலில் ஈ.பி.டி.பிக்கு கிடைத்த சில நூறுகளையும் சேர்த்தால் 55,000 தமிழ் வாக்குகள் அம்பாறையில் அளிக்கப்பட்டிருக்கின்றன.

2015 ஆம் ஆண்டு இடம்பெற்ற பொதுத் தேர்தலில் தமிழர் தேசம் முழுவதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினை நோக்கிய அலை அடித்தது. கூட்டமைப்புக்கு மாற்றாக தங்களை முன்னிறுத்திய எந்தத் தமிழ்க் கட்சியாலும், அந்த அலைக்கு முன்னால் தாக்குப் பிடிக்க முடியவில்லை. அந்த அலையடித்த தருணத்தில்கூட அம்பாறையில் 45,000 வாக்குகளே அளிக்கப்பட்டன. ஆனால், அடுத்த தேர்தலில் மேலதிகமாக 10, 000 வாக்குகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. அதுவும் அந்த வாக்குகளை கருணா அணியால் சேர்க்க முடிந்திருக்கின்றது என்றால், அம்பாறை தமிழ் மக்கள் தெளிவான செய்திகளை சொல்ல முயன்றிருக்கிறார்கள் என்று அர்த்தம்.

கடந்த பொதுத் தேர்தல் முடிவுகள் வெளியாகிய பின்னர், புலம்பெயர் தேசத்தில் வசிக்கும் அம்பாறையைச் சேர்ந்த புலமையாளர் ஒருவர் இந்தப் பத்தியாளரோடு பேசினார். அப்போது, "...தமிழர் தாயகம் முழுவதும் தமிழ்த் தேசிய வாக்குகள் பிரிந்து தமிழ்த் தேசியம் சாரா சிங்களப் பேரினவாதக் கட்சிகளுக்கும் விழுந்திருக்கின்றன. யாழ்ப்பாணத்தில் அங்கஜனின் வெற்றியும், மட்டக்களப்பில் அமலின் (வியாழேந்திரன்) வெற்றியும் அதற்கான உதாரணங்கள். ஆனால், அம்

தொடர்ச்சி ▼

# தமிழ்த் தேசியத்தின் வீழ்ச்சிக்கு யாழ்.மையவாத சிந்தை காரணமாகக் கூடாது!

தொடர்ச்சி ▲

பாறையில் கருணாவுக்கு கிடைத்த வாக்குகளை அவற்றோடு ஒப்பிட முடியாது. கருணா, ராஜபக்ஷக்களின் விசுவாசி என்ற போதும், அம்பாறை மக்கள் மட்டக்களப்பிலிருந்து வந்த அவருக்கு சுமார் 30,000 வாக்குகளை அளித்திருக்கிறார்கள். அதுவும் இரண்டு மாதங்களுக்கும் குறைவான காலத்தில் முன்னெடுக்கப்பட்ட பிரச்சாரங்களினால் அது சாத்தியமாகியிருக்கின்றது. இந்த வாக்குகள் தமிழ்த் தேசியத்தின் வாக்குகள். கடந்த காலங்களில் சிங்கள காடையர்களின் தொல்லைகள், முஸ்லிம்களின் நெருக்கடிகளைச் சந்தித்து நின்ற தமிழ் மக்களின் வாக்குகள். தங்களுக்கு ஒரு சேவியர் (பாதுகாவலன்) வேண்டும் என்பதற்காக கருணாவிற்கு ஆதரவளித்திருக்கிறார்கள். கருணா தேர்தல் பிரச்சாரங்களில் முஸ்லிம் வெறுப்புப் பிரச்சாரத்தைக் கக்கினார், ஆனாலும் அவருக்கு மக்கள் வாக்களித்திருக்கிறார்கள். கல்முனை வடக்கு பிரதேச செயலகப் பிரச்சினை, பறிபோகும் தமிழர் நிலங்களை காக்க முடியாமை போன்ற கூட்டமைப்பின் கையாலாகத் தனத்தின் விளைவுதான், கருணாவின் எழுச்சியும், பிரதிநிதித்துவ இழப்பும். இதற்கு மக்களை நோக்கி யாரும் கை நீட்டக் கூடாது...” என்றார்.

தமிழ்த் தேசியக் கட்சிகளின் தோல்விகள், யாழ்ப்பாணத்துக்குள் சுருங்கிக் கொள்வதில் இருந்துதான் ஆரம்பிக்கின்றன. எந்த விடயத்தை எடுத்துக் கொண்டாலும் யாழ்.மையவாத சிந்தனைகளைத் தாண்டி நின்று சிந்திப்பதில்லை. அதற்கு கட்சிகள் மாத்திரமல்ல, புலமையாளர்கள், சிவில் சமூகப் பிரதிநிதிகள், அரசியல் ஆய்வாளர்கள் என்று தங்களை முன்னிறுத்தும் தரப்பினர் என்று அனைவரும் அடக்கம். முள்ளிவாய்க்கால் முடிவுகளுக்குப் பின்னரான கடந்த பதினைந்து ஆண்டுகளில் பிரதான தமிழ்த் தலைவராக இரா. சம்பந்தன் இருக்கிறார். அவர், கிழக்கைச் சேர்ந்தவர்தான். ஆனால், அவரின் சிந்தனை என்பது யாழ். மையவாதம் மற்றும் கொழும்பு மேட்டுக்குடி சிந்தனைகளின் கலவையாகும். அவர் ஒரு போதும் கிழக்கு மக்களின் பிரச்சினைகளின் தீவிரம் குறித்து அவ்வளவு அக்கறை கொண்டவராக இருந்ததில்லை. தற்போது உடலளவில் அவர் தளர்ந்திருக்கின்றார். அதனால் திருகோணமலைக்கான தமிழர் பிரதிநிதித்துவ கடமைகள் ஆற்றப்படாமல் இருக்கின்றன. ஆனபோதும், அவர் அது தொடர்பில் அவ்வளவு அக்கறையை வெளிப்படுத்தவில்லை. அவர் இன்னமும் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைப் பிடித்துக் கொண்டிருப்பதில் கவனமாக இருக்கிறார். அதேபோல, கடந்த பொதுத் தேர்தலின் பின்னரும், கூட்டமைப்புக்கு கிடைத்த ஒரேயொரு தேசியப் பட்டியல் பதவியையும், தமிழரசுக் கட்சியின் தலைவரான மாவை சேனாதிராஜாவுக்கு வழங்குவதற்காக வாதாடியவர் சம்பந்தன். மாவையும் வயது மூப்பினால் ஏற்படும் உபாதைகளோடு அல்லாடுபவர். அவரினால் அம்பாறைக்கான பிரதிநிதியாக மாவிட்டபுரத்திலிருந்து தொடர்ச்சியாக சென்றுவர முடியுமா, மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வைக்காண முடியுமா என்பவை பற்றியெல்லாம் சம்பந்தன் சிந்திக்கவில்லை. மாறாக, யாழ். மையவாத சிந்தனையின் தேவையை நிவர்த்திக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டின் பக்கத்தில் நின்றார். அதனால்தான், மாவைக்கு தேசியப் பட்டியல் வழங்கப்பட வேண்டும் என்றார். ஆனால், அவரின் கருத்துக்கள் உள்வாங்கப்படாமல், கலையரசனுக்கு தேசியப் பட்டியல் வழங்கப்பட்டது. அதற்குப் பின்னால், அம்பாறை மக்களை திருப்திப்படுத்தும் உத்தியும், உட்கட்சி அரசியலும் இருந்தது.

அடுத்த பொதுத் தேர்தலில் அம்பாறையில் கருணா போட்டியிட்டாலும், அவரினால் கடந்த முறை பெற்ற வாக்குகளை பெறமுடியுமா என்றால், அதற்கான வாய்ப்புக்கள் இல்லை. ஆனால், அம்பாறை தமிழ் மக்கள் கடந்த பொதுத் தேர்தலில் வழங்கிய செய்தியை தமிழரசுக் கட்சி உள்ளிட்ட தமிழ்த் தேசியக் கட்சிகள் புரிந்து கொள்ள வேண்டும். வடக்கில் தமிழ்ப் பிரதிநிதித்துவத்துக்கு அவ்வளவு ஆபத்துக்கள் இல்லை. யார் எந்தக் கட்சியில் வெற்றிபெற்றாலும், அங்கு தமிழ் பிரதிநிதித்துவம் இருக்கும். ஆனால், அம்பாறை, திருகோணமலை போன்ற ஆண்டாண்டு காலமாக பௌத்த – சிங்கள பேரினவாதத்தினால் கபளீரம் செய்யப்படும், தமிழர் தாயக நிலங்களில் பிரதிநிதித்துவம் என்பது கொஞ்சம் சறுக்கினாலே, இழக்கப்பட்டுவிடும். தமிழ்த் தேசிய அரசியலின் எழுச்சி, பௌத்த சிங்கள பேரினவாதத்துக்கு எதிராக நிகழ்ந்தது. அதுதான் இன்றும் அதன் ஆணிவேர்.

ஆனால், தமிழ்த் தேசிய அரசியல் என்பது யாழ். மையவாத அரசியலாக சுருங்கும் போது, தமிழர் தேசத்தின் பெரும்பகுதி அனாதையாக்கப்படும் அவலம் நிகழுகின்றது. அதனால்தான், அம்பாறை தமிழ் மக்கள் எதிர்நோக்கும் தனித்துவ பிரச்சினைகள் குறித்து அவ்வளவு அக்கறை வெளிப்படுத்தப்படுவதில்லை. இன்று கிட்டத்தட்ட அம்பாறையை ‘திகாமடுல்ல’வாக நினைத்து, பல தமிழ்த் தலைவர்கள் மறக்கத் தொடங்கிவிட்டார்கள். இதுதான், இப்போது திருகோணமலைக்கும் நிகழுகின்றது. தமிழர் தேசத்தின் தலைநகர் என்று திருகோணமலையை சொன்னால் மட்டும் போதாது, அங்கு தமிழர் இருப்பைக் காப்பாற்றுவதற்கான சிந்தனைகளை செயற்பாட்டுத் தளத்துக்கு நகர்த்த வேண்டும். மேடைப் பேச்சுக்களினாலும் உணர்வூட்டும் எழுத்துக்களினால் பெரிய மாற்றங்களை நிகழ்த்த முடியாது. ஏனெனில், பேரினவாதமோ தமிழர் நிலங்களை கபளீகரம் பண்ணுவதற்கான அரச இயந்திரத்தின் ஒத்தாசையோடும் பௌத்த பீடங்களின் நிகழ்ச்சி நிரல்களோடும் ஒவ்வொரு நொடியும் சிந்தித்து செயலாற்றிக் கொண்டிருக்கின்றது. அதனை எதிர்த்து நின்று, களத்தை வெற்றி கொள்வதற்கு அர்ப்பணிப்பான செயற்பாட்டுத் தலைமை வேண்டும். அதனை, தமிழ்த் தேசியக் கட்சிகள் பெரியளவில் வெளிப்படுத்துகிறார்கள் இல்லை. அந்தக் கட்சிகளின் ஒற்றை இலக்காக தேர்தல் வெற்றிகள் சுருங்கிவிட்டன.

தொடர்ச்சி ▼

# தமிழ்த் தேசியத்தின் வீழ்ச்சிக்கு யாழ்.மையவாத சிந்தை காரணமாகக் கூடாது!

தொடர்ச்சி ▲

திருகோணமலையும் அம்பாறையும் முழுவதுமாக இழக்கப்படும் சூழல் ஏற்பட்டுவிட்டது. இந்த நிலையை இன்று மட்டக்களப்பும், முல்லைத்தீவும், வவுனியாவும் எதிர்கொண்டிருக்கின்றன. அடுத்து அது மன்னாருக்கு பரவும். இறுதியாக யாழ்ப்பாணத்தையும் கபளீகரம் செய்வதோடு முடியும். யாழ்ப்பாணத்தைச் சுற்றி, தமிழ் மாவட்டங்களே இருக்கின்றன. அதனால், நில ஆக்கிரமிப்பு என்பது அவ்வளவு இலகுவாக நடந்துவிட வாய்ப்பில்லை. அதுபோல, தமிழர் பிரதிநிதித்துவத்துக்கும் சிக்கல் இல்லை என்பதுதான், யாழ். மையவாத சிந்தனையாளர்கள், தமிழர் நிலத்தின் பெரும்பான்மையான நிலப்பகுதி குறித்தும், அவை எதிர்கொண்டிருக்கும் பிரச்சினைகள் குறித்து அவ்வளவு அக்கறையின்றி இருப்பதற்கான காரணமாகும். இன்றைக்கு எந்த அரசியல் முடிவு, எடுக்கப்பட்டாலும் யாழ்ப்பாணத்தில் இருந்துதான் எடுக்கப்படுகின்றது. ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் போட்டியிட வேண்டும் என்று பேசுவோரும், புறக்கணிப்புக் கோசத்தை முன்வைப்பவர்களும்கூட யாழ்ப்பாணத்தைத் தாண்டி சிந்திப்பதில்லை. இனமொன்றின் அரசியல் முடிவை, அந்தச் சனக்கூட்டம் பரவியிருக்கின்ற பகுதிகளில் கருத்துக் கேட்டு, வாதப் பிரதிவாதங்களை நடத்தி எடுக்க வேண்டும் என்ற எந்தவித பொறுப்பும் இல்லை. மாறாக, யாழ்ப்பாணத்தில் இருந்து கொண்டு தங்களுக்கு வாகான முடிவுகளை எடுக்கிறார்கள். அதற்கு சில புலம்பெயர் தரப்பினரின் ஒத்துழைப்பை பெற்றால் போதுமென்று நினைக்கிறார்கள். இந்த நிலை நீடித்தால், தமிழ்த் தேசிய அரசியலில் வீழ்ச்சி சொல்லிக் கொள்ள முடியாத அளவுக்கு இருக்கும். இன்றைக்கு யார் விரும்பினாலும் இல்லையென்றாலும் மட்டக்களப்பில் பிள்ளையானின் (சிவனேசத்துரை சந்திரகாந்தன்) அரசியல் வெற்றியை யாரினாலும் புறந்தள்ள முடியாது. அவரின் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சிக்குப் பின்னால், சாதாரண மக்கள் மாத்திரமல்லர், தங்களை வெளிக்காட்டிக் கொள்ளவிட்டாலும் புலமையாளர்களும், புலம்பெயர்ந்த மட்டக்களப்பின் மக்களும் கணிசமாக இருக்கிறார்கள். அது, தமிழ்த் தேசியக் கட்சிகளின் தோல்விகளினால் நிகழ்ந்தது.

யாழ்ப்பாணத்தில் டக்ளஸ் தேவானந்தாவின் வெற்றியையும் மட்டக்களப்பில் பிள்ளையானின் வெற்றியையும் சில தரப்பினர் ஒன்றாக ஒப்பிடுகிறார்கள். ஆனால், இரண்டும் ஒன்றல்ல. ஏனெனில், ஈ.பி.டி.பிக்கான வாக்குகள் என்பது டக்ளஸின் காலத்துக்குப் பின்னால் கரைந்து விடும். இதுதான், தமிழ் ஆயுதக் குழுக்களாக இருந்து கட்சிகளாக மாறிய புளொட், ரெலோ, ஈ.பி.ஆர்எல்.எவ். ஆகிவற்றுக்கான எதிர்கால நிலையும். ஆனால், பிள்ளையானின் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி மட்டக்களப்பில் தனி நபர் அடையாளத்தைத் தாண்டி தன்னையொரு கட்சியாக வளர்த்துக் கொண்டிருக்கின்றது. பிள்ளையான் இல்லையென்றாலும், அந்தக் கட்சியோடு கணிசமான மக்கள் இருப்பார்கள். இந்த வேறுபாட்டைப் புரிந்து கொண்டால் போதும், தமிழர் தாயகத்தில் ஒவ்வொரு பிரதேசத்தினதும் தனித்துவப் பிரச்சினைகளை அடையாளம் கண்டு, அதற்கான செயற்திட்டங்களை வகுத்துச் செயற்பட வேண்டும். அதனைச் செய்யாமல், தொடர்ச்சியாக தமிழ்த் தேசியத்தின் பெயரினால் தமிழ்த் தேசியக் கட்சிகள் தப்பித்துக் கொள்ளலாம் என்று எண்ணக்கூடாது. அதைக் கட்சிகள் மாத்திரமல்ல, தமிழ்த் தேசியத் தரப்புக்கள் அனைத்தும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

தமிழ்த் தேசியத் தரப்புக்கள் முதலில் யாழ். மையவாத சிந்தனையில் இருந்து வெளிவந்து, 'தமிழ்த் தேசிய நோக்கு நிலை'யை தமிழர் தேசம் சார்ந்து வடிவமைக்க வேண்டும். அது சமூக பொருளாதார கட்டமைப்பின் ஒவ்வொரு படிநிலையில் இருந்தும் நிகழ வேண்டும். அதுதான் தமிழ்த் தேசிய அரசியலை பலப்படுத்த உதவும். மாறாக, தேர்தல் அரசியலைப் பிரதானப்படுத்தி மாத்திரம் சிந்தித்தால், கடந்த தேர்தலில் கருணா செலுத்திய தாக்கம் மாதிரியான விடயங்களை, தமிழர் தேசத்தில் ஒவ்வொரு பகுதியும் எதிர்கொள்ள வேண்டி வரலாம். அப்படி தொடர்ச்சியாக நிகழ்ந்தால் தமிழ்த் தேசிய அரசியல் மெல்ல மெல்ல கரைய ஆரம்பிக்கும். அது, எதிர்காலத்தில் தமிழர் இருப்பை இல்லாமற் செய்து விடும். அதனைப் புரிந்துகொள்ளாமல் இன்று குறுகிய நலன்களில் அக்கறை கொண்டு கோட்டை விட்டுவிட்டு, எதிர்காலத்தில் தமிழ்த் தேசியத் தரப்பினர் புலம்பிப் பயனில்லை.

## டெங்கு நோய் பதிவாகும் வீதம் மீண்டும் அதிகரிப்பு



கொழும்பு, கம்பஹா, இரத்தினபுரி உள்ளிட்ட 8 மாவட்டங்களில் டெங்கு நோயாளர்கள் பதிவாகும் வீதம் மீண்டும் அதிகரித்துள்ளது.

நாட்டில் நிலவும் மழையுடனான வானிலை காரணமாக டெங்கு நோயாளர்கள் பதிவாகும் வீதம் அதிகரித்துள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், 18 மாவட்டங்களில் எதிர்வரும் 27 ஆம் திகதி திங்கள் கிழமை முதல் தேசிய டெங்கு ஒழிப்பு வாரம் பிரகடனப்படுத்தப் படவுள்ளது.

முடியுமானவரை சுற்றுச்சூழலை சுத்தமாக வைத்திருக்குமாறு தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.




# மலையக ரயில் மார்க்கத்தில் ரயில் சேவைகள் பல இரத்து

மலையக ரயில் மார்க்கத்தின் பல இடங்களில் மரங்கள் முறிந்து வீழ்ந்துள்ளமையால், ரயில் சேவைகளுக்கு இடையூறு ஏற்பட்டுள்ளது.

கடுகன்னாவை பகுதியில் மரமொன்று முறிந்து வீழ்ந்தமையினால், கொழும்பிலிருந்து பதுளை நோக்கிச் செல்லும் பொடி மெனிக்கே ரயில் அந்தப் பகுதியில் நிறுத்திவைக்கப்பட்டுள்ளது.

இதல்கஸ்ஹின்ன பகுதியில் மரமொன்று முறிந்து வீழ்ந்தமையினால், பதுளையிலிருந்து கொழும்பு நோக்கி பயணிக்கும் உடரட்ட மெனிக்கே ரயில் சேவையும் பாதிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, அதிக மழை மற்றும் காற்றுடனான வானிலையினால் ரயில் மார்க்கங்களில் ஏற்பட்டுள்ள பாதிப்புகளை கருத்திற்கொண்டு கொழும்பு – பதுளைக்கு இடையிலான இரண்டு இரவு நேர தபால் சேவைகளும் இரத்து செய்யப்பட்டுள்ளன.

இதனிடையே, பதுளையில் இருந்து கொழும்பிற்கு செல்லும் வீதியில் தியத்தலாவைக்கும் ஹப்புத்தளைக்கும் இடையிலான போக்குவரத்து மீண்டும் தடைப்பட்டுள்ளது.

எனவே, பண்டாரவளையில் இருந்து ஹப்புத்தளை செல்லும் மேல் வீதியை பயன்படுத்துமாறு வாகன சாரதிகளிடம் பொலிஸார் நேற்று வேண்டுகோள் விடுத்தனர்.



# வங்காள விரிகுடாவில் நிலவும் தாழமுக்கம் சூறாவளியாக வலுவடைவதற்குச் சாத்தியம்

தென்மேல் பருவப்பெயர்ச்சியினால் வங்காள விரிகுடா கடற்பிராந்தியத்தில் நிலவும் தாழமுக்கம் சூறா”வளியாக வலுவடையக்கூடுமென வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

எனவே, மறுஅறிவித்தல் வரை வங்காள விரிகுடா மற்றும் அரபிக் கடற்பிராந்தியங்களுக்கு செல்வதை தவிர்க்குமாறு வளிமண்டலவியல் திணைக்களத்தினால் கடற்றொழிலாளர்களுக்கும் மீனவர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த இரு கடற்பிராந்தியங்களிலும் மணித்தியாலத்திற்கு 80 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசக்கூடுமென வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், நிலவும் காற்றுடன் கூடிய மழையுடனான வானிலை தொடர்ந்தும் நீடிக்குமென எதிர்பார்க்கப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய, சப்ரகமுவ மாகாணத்திலும் நுவரெலியா மாவட்டத்தின் சில இடங்களிலும் 100 மில்லிமீற்றருக்கும் அதிக மழைவீழ்ச்சி பதிவாகுமென திணைக்களம் கூறியுள்ளது.

மேல், வடமேல் மாகாணங்களிலும் காலி, மாத்தறை மற்றும் கண்டி மாவட்டங்களிலும் 75 மில்லிமீற்றருக்கும் கூடிய மழைவீழ்ச்சி பதிவாகக் கூடுமெனவும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதனிடையே, நாட்டில் நிலவும் பலத்த மழையுடனான வானிலையால் 18 மாவட்டங்களில் 9 ஆயிரத்து 616 குடும்பங்களை சேர்ந்த 34 ஆயிரத்து 880 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.





# பொது வேட்பாளரும் ஏமாறும் சிவில் சமூகமும்!

தமிழ்த் தேசியக் கோட்பாட்டுச் சித்தாந்தத்தை நிலைநிறுத்தும் நோக்கில் தாயகம், தேசியம், தன்னாட்சி, சுயநிர்ணயம் எனும் நோக்கு நிலையில் தமிழர்களின் அடிப்படைக் கட்டமைப்பை வலிமைப்படுத்தி நிலைநிறுத்த வேண்டியது தமிழ்த் தேசியம் பேசுபவர்களின் தார்மீக கடமையாகும். இதை அடைவதற்கான இலக்கு நோக்கியே கடந்த 70 ஆண்டுகளாக மிதவாத அரசியலிலும் ஆயுத போராட்டத்திலும் பல முனைப்புகள் மேற்கொள்ளப்பட்டன. யாவற்றிலும் பின்னடைவும், தோல்வியும், அவமானமும், இழப்பும், இன அழிவுமே எஞ்சியன. இதில் 2009 க்குப் பின்னர் நிலைமை மிகவும் வலுவிழந்து போனது, போய்க்கொண்டிருக்கிறது. அதைத் தடுப்பதற்கான நிலையான வழிமுறைகள் எவையும் நெறிமுறை சார்ந்து கட்டமைக்கப்படவில்லை. அதற்குரிய ஆக்கபூர்வமான, புத்திபூர்வமான முயற்சிகளும் மேற்கொள்ளப்படவில்லை.

இதற்கு தூய தமிழ்த்தேசிய நிலைப்பாட்டில் நின்று, நிலைக்கக்கூடிய வல்லாண்மையுள்ள தலைவரின்மையே அடிப்படைக்காரணம்.

15 ஆண்டுகள் கடந்து போய்விட்டன. அந்தக் காலத்தோடு தமிழ்த் தேசியமும், தமிழர் தாயகமும், தமிழ்த் தேசிய உணர்வும் கரைந்து கொண்டே போகின்றன. இது பற்றி ஆழமான உணர்தல் இன்றி, அடுத்த தேர்தலில் எப்படி வெல்லலாம் என்றே தமிழ் அரசியல்வாதிகள் சிந்திக்கிறார்கள். அதை நோக்கியே நகர்கின்றனர். பதவி சண்டையாலும், உள்கட்சி முரண்பாடுகளாலும், பல கட்சிகளாகவும் பல பிரிவுகளாகவும் உருக்குலைந்துவிட்டனர். பெரிய அண்ணன் பாத்திரத்தில் எவரும் இன்மையால்தான் கட்டுப்பாடோ, கட்டமைப்போ, கூட்டு பொறுப்போ இன்றி எல்லோரும் தலைவர்களாகிவிட்டனர். அதுதான் இனத்தின் பெரிய சாபக்கேடு. தற்போதைய நிலையில் தமிழ் மக்களுக்குத் தலைமை தாங்கக்கூடிய நிலையில் எந்தத் தமிழ்க்கட்சியும் இல்லை. கட்சிகளுக்கும்,கூட்டுக்களுக்கும் கூட உருப்படியான தலைவர்களும் இல்லை. மிக மிகப் பலவீனமான நிலையில் தமிழர்கள் நட்டாற்றில் தவிப்பது போல்தான் இன்றைய கள நிலைவரம் காணப்படுகிறது.



வி.எஸ்.சிவகரன்

ஏலவே அம்பாறை மாவட்டம் கைநழுவி போய்விடும் நிலையில் உள்ளது. இதே நிலையில்தான் தற்போது திருகோணமலையும் எட்டிப் பிடித்து உள்ளது. யாழ்ப்பாணம், வன்னி, மட்டக்களப்பிலும் உள்ளக ரீதியாக குடியேற்றம், கட்டமைக்கப்பட்ட நில அபகரிப்பு, அரச திணைக்களங்களின் நெருக்கடி என பல்வேறு விதமான பிரச்சினைகள் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. இதைப் பற்றி எல்லாம் கிஞ்சித்தும் கவலை கொள்பவர்களாகத் தமிழ்தேசிய அரசியல்வாதிகள் இல்லை.

ஆகவே, இவ்வாறான கையறு நிலையில் தமிழ்ப்பொது வேட்பாளர் என்பது நடைமுறைச் சாத்தியமா?

ஆனால் இவ்விடயத்தில், இதன் அடிப்படைக் கொள்கைக் கோட்பாடுகளுடன் இப்பத்தியாளர் உட்பட தமிழ்த்தேசியத்தை நேசிக்கும் எவருக்கும் இரு கருத்து நிலை இருக்காது. ஆனால் மிகப் பலவீனமான களச் சூழலில் இந்த கோட்பாட்டுச் சித்தாந்தத்தை நடைமுறைப்படுத்தக் கூடிய வலிமை, வல்லமை அற்ற நிலையில் தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகள் உள்ளமையால் இதனை எப்படி மக்கள் மயப்படுத்துவது, அதற்கான நடைமுறைச் சாத்தியமான நிகழ்ச்சி நிரல் என்ன என்ற கேள்விகள் எழும்புகின்றன.

2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரை நடைபெற்ற சகல தேர்தல்களிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேண்டுகையை பெரும்பான்மையான தமிழ் மக்கள் ஏற்றுக் கொண்டனர். 2010 ஆம் ஆண்டில் ஜனாதிபதி தேர்தல், அதே ஆண்டில் நாடாளுமன்றத் தேர்தல், 2011 ஆம் ஆண்டு உள்ளூராட்சி மன்றத் தேர்தல், 2012 ஆம் ஆண்டு கிழக்கு மாகாண சபை தேர்தல், 2013 ஆம் ஆண்டு வடக்கு மாகாண சபை தேர்தல், 2015 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல், பின்னர் அதே ஆண்டில் நாடாளுமன்றத் தேர்தல் ஆகிய ஏழு தேர்தல்களிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கோரிக்கையை ஏற்றுத் தமிழ் மக்கள்

தொடர்ச்சி ▼

# பொது வேட்பாளரும் ஏமாறும் சிவில் சமூகமும்!

தொடர்ச்சி ▲

வாக்களித்தார்கள். யுத்தத்துக்குப் பிந்திய நிலைமை என்பதனால் சம்பந்தனின் தலை மைத்துவத்தை ஓரளவுக்கு சாமானிய மக்கள் நம்பினார்கள்.

ஆனால், 2015 ஜனாதிபதித் தேர்தல் மூலம் ஏற்பட்ட நல்லாட்சி அரசின் இணக்க அரசிய லாலும், நிழல் அமைச்சர் பதவியாலும் தமிழ்த் தேசிய நீக்கம் ஏற்பட்டது. புலி நீக்க அரசியலில் முனைப்புக் காட்டிய சம்பந்தன், தமிழ்த்தேசிய நீக்கத்தையும் ஏற்படுத்திவிட்டார். இவர்களின் இணக்க அரசியலால் எதுவும் தமிழர்களுக்கு நிகழவில்லை. இப்பத்தியாளர் உட்பட பலர்



தமிழரசு கட்சியில் இருந்து கொள்கை ரீதி யாக முரண்பட்டு வெளியேறினார்கள்.

2015இல் நாம் என்ன கூறி வெளியேறி னோமோ அது இன்று தீர்க்க தரிசனமாக நிறை வேறியுள்ளது. ஆனால் தமிழ்த் தலைமைகள் இன்னும் சிந்திக்கவே இல்லை. எனவே தலை வர்கள் 2015க்கு பின்னர் இணக்க அரசிய லில் ஈடுபட்டமையும், கிழக்கு மாகாணத்தில் கேவலம் அதிகாரம் அற்ற இரண்டு அமைச்சர் பதவிக்கு கூட்டாட்சி நடத்தியமையும், உள்ளூராட்சி மன்றங் களில் எந்தக் கொள்கையும் இன்றி பதவிக் காகப் பிசாசுடனும் கூட்டு சேருவோம் எனும் நிலைப்பாட்டை வெளிப்படுத்தியமையும் கண்டு மக்கள் சலிப்படைந்து விட்டனர். இவர்கள் மீது வைத்திருந்த புலிகளின் நீட்சி என்ற எண்ணமும் எதிர்கால நம்பிக்கையும் குறையத் தொடங்கின. தலைவர்கள் கம்பரலிய அபிவிருத்தி மாயைக்குள் அகப்பட்டுக் கொள்ள தொண்டர்களும், வாக் காளர்களும் பிற நலன் நோக்கி சிந்திப்பதில் தவறில்லைத்தானே...?தலைவர்கள் எவ்வழியோ மக்களும் அவ்வழியே என்னும் இணக்க வழி முறையையும், அபிவிருத்தியும் வேலை வாய்ப்பும் என்று நலன் நாடல்களைப் பின்பற்றத் தொடங்கி விட்டனர். இதுவே, தமிழ்த் தேசியத்தின் மீது வலி மையாக இருந்த மக்களை இணக்க அரசியல் நோக்கி நகர்த்தியது.

இவர்கள்தான் ஆட்சியாளர்களின் இதயத்தில் இருக்கிறோம் என்றவர்கள். நீங்கள் இதயத்தில் இருந்தால் நாங்கள் இமையாக இருந்து இணக்கத்தை தொடர்வோம் என மக்கள் தீர் மானித்து விட்டனர். அதனால்தான் கடந்த தேர் தலில் வாக்குச் சிதறல்கள் ஏற்பட்டு பின்னடைவு நேர்ந்தது. ஆகவே தமிழருக்கு பெரும் துரோகம் செய்தது தமிழ்த்தேசிய கூட்டமைப்பே. தமிழ் மக்கள் அல்லர். மக்களைக் குறை கூறுவதில் அர்த்த மில்லை. வரும் தேர்தல்களிலும் இந்த நிலைமை மோசமடையலாம்.

ஆகவே இவ்விதமான நிலையில் உள்ள கள யதார்த்தத்தை புரியாமல் பொது வேட்பாளர் என புறப்பட்டவர்களின் நிலைமை பரிதாபம். கடந்த ஒரு தசாப்தத்திற்கு மேலாக, தமிழ்த் தேசியக் கட்சி களை ஐக்கியப் படுத்தவும், புதிய கூட்டு உரு வாக்கவும் என இப்பத்தியாளர் 'தடம் மாறு கிறதா தமிழ்த் தேசியம்?' எனும் தொடங்கிய கூட்டங்கள் பல்வேறு விதமான தலைப்புகளிலும் தொடர்ந்து நடத்தப்பட்டன. உள்ளகக் கலந்துரை யாடல்கள், இரகசிய சந்திப்புக்கள் என கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக என்னோடு சேர்ந்து பயணித்தவர்கள் – என் அன்புக்குரியவர்கள் – அவர்களின்று விமர்சனத்திற்குள்ளகியுள்ளமை எனக்கும் வேதனையே. எனவே பல்வேறு விதமான பட்டறிவு அனுபவங்களை பெற்றுக் கொண்டுள் ளோம்.

அந்த அனுபவத்தில் இருந்து இவர்கள் எந்தப் பாடத்தையும் கற்றுக் கொண்டவர்களாகத் தெரிய வில்லை. தமிழ்த்தேசியம் பேசிய கட்சிகள் எல் லாம் கடந்த காலத்தில் எம்மை எப்படி ஏமாற்றின என்பது இவர்களுக்கு நன்கு புரிந்த பின்னும் இவர்களை நம்பி பொது வேட்பாளர் விடயதில் களத்தில் இறங்கியது மகா தவறு. அதுவும் முரண்பட்டவர்களின் கூட்டின் ஆதரவுடன் முன் நகர்ந்தது அதைவிடத் தவறு. இவர்களில் சிலர் ஏனோ தானோ என்று கூட்டங்களுக்குச் சென்று வந்தனர். அதுவும் ஓர் ஊடக முதலாளி அழைத் ததால் ஊடகத்தைப் பகைக்க முடியாத கட்டத்தில் அந்த அச்சத்தினால் சென்றனர். இப்பொழுது அந்த உபயகாரர்களும் அமைதியாகிவிட்டனர் போல் தெரிகிறது. சில தனி நபர்களே இதனை முன்னெடுக்கின்றனர். ஆகவே இவர்களால் அரசி யல்வாதிகளுக்கு எந்த அச்சமும் இல்லை. அத னால் இவர்களை இலகுவாக ஏமாற்றி விடுவார் கள். யாழில் நடைபெற்ற ஜனாதிபதி நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன் உரையே இதற்குச் சான்று.

தொடர்ச்சி ▼

# பொது வேட்பாளரும் ஏமாறும் சிவில் சமூகமும்!

தொடர்ச்சி ▲

இவ்விடயத்தில் தமிழரசு கட்சி ஒருபோதும் இதற்கு (பொது வேட்பாளர் திட்டத்துக்கு) இணங்காது என்பது கடந்த 70 ஆண்டுகளாகக் கொழும்போடு அதன் மிதவாத அரசியலின் இணக்கப்பாட்டின் வெளிப் பாட்டை வைத்தே விடுதலை அரசியல் மீதான நலனை எவ்வாறு அது உற்றுநோக்கும் என் பதனை புரிந்து கொள்வதற்கு அதிக அறிவு அவ சியம் இல்லை.

வட்டுக்கோட்டை தீர்மானத்திற்கு நிகரான கோட்பாட்டுத் தீர்மானத்தை முன்வைத்து இப் போது பொது வேட்பாளரை நிறுத்தப் போகின் றனர் எனக் கூறுகின்ற தரப்பினர், 13க்கு ஆதரவாக இந்தியாவுக்குக் கடிதம் எழுதின கட்சிகளோடும், இதில் 13ஐ ஆதரித்த பத்தி எழுத்தாளர்களோடும், கூட்டாக இருப்பதும் இவர்களின் அடிப்படை நோக்கு நிலையில் எப்படி தடம் மாறாமல் பய ணிக்க முடியும் எனும் கேள்வியை எழுப்பாமல் இல்லை.

ஆகவே இவர்களின் முயற்சியின் பிரகாரம் பொது வேட்பாளர் கணிசமான வாக்குகளை பெறாவிட்டால் இவர்கள் முன்வைத்த அடிப்படை கோட்பாட்டு சித்தாந்தத்தை மக்கள் நிராகரித்து விட்டனர் என அரசும் ஏனைய தரப்புகளும் மிக இலகுவாக கூறி தமிழ் மக்களின் இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில் வழமை போன்று பொருளாதார மேம்பாடே தீர்வு எனக் கூறி விடுவார்கள். இதில் உள்ள ஆபத்தை இவர்கள் புரியாதமை வேடிக் கையே.

போரிடுவதற்கு களமே முக்கியம். களம் சாதகமா என்பதை முதலில் உய்த்துணர வேண்டும்.

இந்தியா இந்த விடயத்தில் வழமை போன்று இரட்டை வேடம் போடுவதாகவே புரிகிறது. இராஜ தந்திரத் தரப்புகள் ஒருவிதமாகவும் புலனாய்வு தரப்புகள் மற்றொரு விதமாகவும் இரண்டு பட்ட நிலையிலே இதனை அணுகுகின்றன என அறிய முடிகிறது. இது இந்தியாவின் வழமையான – வாடிக் கையான– செயற்பாடு ஆகும்.

இந்த விடயத்தில் இறங்கி, தமிழ் மக்கள் தோல்வி கண்டால் அல்லது தமிழருக்குப் பின்னடைவு ஏற்பட்டால, டெல்லி உளமாற ரசிக்கக் கூடிய மனோ நிலையிலேயே உள்ளது. ஏனெனில் கடந்த 15 ஆண்டுகளில் இந்திய மத்திய அரசு எந்த விதமான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் தமிழர் களுக்கு செய்யவில்லை.

எனவே கடந்த ஒரு தசாப்தத்திற்கு மேலாக இந்தத் தமிழ் கட்சிகளை தமிழ்த் தேசிய அடிப்படை நலனில் அக்கறையோடும் உண்மையோடும் நேர்மையோடும் விசுவாசமாக பயணிக்க வைக் கலாம் எனும் நோக்கோடு எடுத்த முயற்சிகள் அத் தனையும் தோற்றே போயின. ஆகவே இனியும் இவர்களை நம்பியிராமல், இந்தப் பொது வேட்பா–ளர் விடயத்தில் முன் நிற்கின்ற சிவில் அமைப்புகள் ஒன்று திரண்டு ஒரு புதிய அரசியல் கட்சியை உருவாக்கி, ஒரு சீர்திருத்தமான நோக்கில் தமிழர் அரசியலை கொண்டு செல்வதற்கு முனைய வேண்டும்.

இந்தியாவில் ஊழலுக்கு எதிராகப் போராடிய அண்ணாஹசாரே அணியில் இருந்த கெஜ்ரிவால், டெல்லியில் ஆட்சியைக் கைப்பற்றி பஞ்சாப் வரை யும் வியாபித்து, நாட்டில் மூன்றாவது தேசியக் கட்சியாக வளர்ச்சி அடைந்தார். அதுவும் டெல்லி யில் இந்திய சுதந்திரத்துக்காகப் போராடிய குடும் பத்தை சேர்ந்தவரும் பல தடவைகள் முதல்வராக இருந்தவருமான ஷீலா டிக்ஸிற்றைத் தோற் கடித்து பத்தில் ஒன்பது வீதம் என்னும் அடிப்படை யில் பெரு வெற்றி பெற்றார். இன்று மத்தியில் ஆளும் பா.ஜ.க. அவரைப் பழி வாங்கி வருகிறது. அது வேறு விடயம்.

அன்று விளக்குமாறு சின்னத்தைக் கையில் எடுத்தவாறு டில்லியிலிருந்து ஊழல் அரசியலைத் துடைத்தகற்றுகிறேன் என்ற ஆவேசத்தோடு கள மிறங்கி சாதித்தார் கெஜ்ரிவால்.

ஆனால் அவ்வாறான ஒரு களத்தைத் தயார் படுத்தி, நடைமுறைச் சாத்தியமான அரசியலை அறத்தின் வழியில் கொண்டு செல்வதற்கு வழி தேடுவதே உகந்தது.

தமிழீழத் தேசியத் தலைவர் கூறியமை போல் ‘பல தலைவர்களை நம்பினேன், பல தலைவர் களைத் தேடினேன், எல்லோரும் ஏமாற்றி விட்ட னர், அதனால் நானே தலைவராகி விட்டேன்’ என்ற கூற்றை முன்னுதாரணமாக்கிக் களத்துக்குத் தயாராக வேண்டும். அது ஒன்றே இவர்கள் கூறும் மாற்று, அரசியல் மாற்றத்தையும் ஏற்படுத்தும். நோக்கு அரசியல் செயல்பாட்டுக்கு வித்திடும். யதார்த்த அரசியல் போன்றவற்றை செயற்படுத் தவும் நிலை நிறுத்தவும் அதுவே வாய்ப்பாக அமையும்.

இன்று ஆதாயச்சூதாடிகளாக கதிரைகளைச் சூடேற்றி, தொடர்ந்து தேர்தலில் வெற்றி பெற்று, தமிழ்த்தேசியம் எனும் கோட்பாட்டையும் அதன் நோக்கையும் அடைவதற்குரிய வழிகளை ஏற்படுத் தாமல் ஏமாற்று அரசியல் செய்யும் அசகாய சூரர்களுக்கு மிகப்பெரிய சாட்டையடி கொடுக்கக் கூடியதாக இருக்கும்.

பொது வேட்பாளர் விடயம் களத்துக்கு வரக் கூடிய வாய்ப்பு மிகக் குறைவு. ஏனெனில் சிவில் சமூகமாக கள அரசியல் பணிகளைச் செய்யக் கூடிய அளவுக்கு தொண்டர்களோ பணமோ அதற் குரிய ஏனைய வசதிகளோதற்கு இல்லை. அர சியல் கட்சிகள் ஆதரிக்கக் கூடிய நிலையில் இல்ல. அவர்கள் தங்களின் நாடாளுமன்றத் தேர்தல் அரசியலில் எப்படி வெற்றி பெறலாம் என்கின்ற வியூகத்தையே இப்பொழுது வகுத்து வருகின்ற னர். ஆகவே இனியும் தாமதிக்காமல் – இவர்களை நம்பாமல் – களத்தை எதிர்கொள்ள தயாராகுங்கள். காலம் ஒருபோதும் இடைவெளியை விட்டதில்லை. தலைவர்களைக் காலம் உருவாக்கிக் கொண்டே இருக்கும். ஆகவே புறப்படுங்கள் களம் நோக்கி – கெஜ்ரிவால் போல தும்புக்கட்டையையோ, விளக்குமாற்றையோ தூக்கிக் கொண்டு. தமிழ்த் தேசிய சிந்தாந்தப் புலத்தை அடைத்து நிற்கும் புல்லுருவிகள் அகற்றித் துடைத்து, தமிழ் தேசியத் தளத்தை சுத்தப்படுத்தி, அதில் தாயகம், தேசியம், தன்னாட்சி, சுயநிர்ணயம் எனும் நோக்கு நிலை களை உறுதியாக நிலைநிறுத்துவோம்...!

# இன்றைய ராசி பலன்கள் - 26.05.2024


மேஷம்

இன்றைய நாள் சற்று மந்தமாக காணப்படும். ஆன்மீக ஈடுபாடு மன நிம்மதி மற்றும் ஆறுதலை அளிக்கும்.

வேலை தொடர்பான பயணம் காணப்படுகின்றது. அதன் மூலம் சுமா ரான பலன்களே கிடைக்கும். கடின உழைப்பின் மூலம் மட்டுமே வெற்றி கிட்டும்.

மகிழ்ச்சியாக இருக்க அகந்தை உணர்வை தவிர்க்கவும். உங்கள் துணையுடன் மனம் திறந்து பழகவும்.

அதிகரிக்கும் பொறுப்புகள் காரணமாக கூடுதல் செலவுகள் ஏற்படும். இது உங்களுக்கு மிகுந்த கவ லையை அளிக்கும்.

ஆரோக்கியம் சுமாராக இருக்கும். தலை வலி ஏற்பட வாய்ப்புள்ளது. அது உங்களுக்கு வருத்தத்தை அளிக் கும்.


ரிஷபம்

நீங்கள் தைரியமாக சரியான பாதை யில் செயல்பட வேண்டியது அவசியம். உங்கள் பயத்தை ஒதுக்கித் தள்ளி நம் பிக்கையுடன் செயற்படுங்கள்.

உங்கள் பணிகளை திறம்பட ஆற்ற உங்களுக்கு பொறுமை அவசியம். நீங்கள் யோசித்துச் சிறப்பாகச் செயற்பட வேண்டும்.

உங்கள் துணையுடன் பேசும்போது இணக்கம் குறைந்து காணப்படும். முதல் முறை பேசிக்கொள்வது போல பேசுவீர்கள்.

இன்று கூடுதல் செலவுகள் ஏற்படும் என்பதால் உங்களுக்கு கவலை ஏற்படும். இது தவிர்க்க முடியாதது. எனவிய கவனமாக இருக்கவும்.

கண்களில் எரிச்சல் பாதிப்பை ஏற்படுத்தும். மருத்துவம் பார்த்துக் கொள்வது நல்லது.


மிதுனம்

நீங்கள் சுய முன்னேற்றப்பாதை யில் செல்வீர்கள். நீங்கள் இன்று சில லட்சியங்களை அடைய வேண்டும் என்று உங்களை தயார் படுத்திக் கொண்டு இந்த நாளை சுமூகமாக்குவீர்கள்.

பணியிடச் சூழல் உங்களுக்கு சாதகமாக இருக்கும். உங்கள் பணியில் வெற்றி பெற உங்கள் மனதை செலுத்துவீர்கள்.

நீங்கள் உங்கள் துணையுடன் நட்பாகவும் அன் பாகவும் நடந்து கொள்வீர்கள். பயணத்தின் போது இருவரும் உற்சாகமான தருணங்களை பகிர்ந்து கொள் வீர்கள்.

கடின உழைப்பின் மூலம் மட்டுமே வெற்றி கிடைக் கும். பணப்புழக்கம் அதிகரிக்கும்.

ஆரோக்கியம் பொதுவாக சிறப்பாக இருக்கும். அமைதியான அணுகுமுறை மூலம் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.


கடகம்

இன்று பண வரவு காணப்படலாம். இன்று உங்கள் செயல்களை முடிப்பதற்கு திட்டமிடுவீர்கள். நீண்ட கால திட்டங்க ளுக்கு இந்த நாள் உகந்த நாள்.

உங்கள் பணியில் புதிய வாய்ப்புகள் வருவதற்கான வாய்ப்புகள் உள்ளது. கடின உழைப்பு மற்றும் சிறந்த முயற்சி மூலம் நீங்கள் சிறந்த நிலைக்கு வருவீர்கள். இதன் மூலம் உங்க ளுக்கு அங்கீகாரம் கிடைக்கும்.

நீங்கள் உங்கள் துணையுடன் வெளிப்படையாக பழகுவீர்கள். இதனால் இருவருக்கிடையே நல்லிணக்கம் வலுப்படும்.

உங்கள் நிதி நிலைமை திருப்திகரமாக இருக்கும். பணத்தை பயனுள்ள நோக்கத்துக்குச் செலவு செய் வீர்கள்.

உடல் ஆரோக்கியம் பொதுவாக சிறப்பாக இருக்கும்.


சிம்மம்

கையிலுள்ள பணிகளை முடிப்பதற்கு நீங்கள் மிகுந்த முயற்சி எடுக்க வேண்டும். பொதுவில் இன்றைய நாள் மிகவும் கடினமாக இருக்கும்.

கவனக் குறைவு காரணமாக பணி யில் தவறுகள் நேரலாம். பணிகளை திறமையாக ஆற்ற ஆன்மீக ஈடுபாடு சிறந்தது.

உங்கள் துணையிடம் உணர்சிவசப்படுவீர்கள். இதனால் இருவருக்குமிடையே தன்னம்பிக்கை நிலை குறையும்.

நிதி நிலை வளர்ச்சி சற்று குறைவாக இருக்கும். உங்கள் செலவைக் குறைக்கச் சிறந்த திட்டமிடலை மேற்கொள்ள வேண்டும்.

உடல் ஆரோக்கியத்தில் சிறிது பாதிப்பு இருக்கும். உங்களுக்கு முதுகு வலி ஏற்பட வாய்ப்புள்ளது.


கன்னி

இன்றைய நாள் முன்னேற்றத்திற்கு உகந்த நாள் அல்ல. உங்கள் அணுகு முறையில் யதார்த்தம் தேவை.

உங்கள் பணிகளை மேற்கொள்ள பொறுமை அவசியம். பணிச்சுமையும் அதிகமாக காணப்படும்.

நீங்கள் உணர்ச்சி வசப்பட்டு உங்கள் துணை யுடன் சண்டையிடுவீர்கள். உறவில் நல்லிணக் கத்தை பராமரிக்க இத்தகைய போக்கை தவிர்க்க வேண் டும்.

பணப்புழக்கம் குறைந்து காணப்படும். அதிகரிக்கும் செலவுகள் கவலையை அளிக்கும்.

தலைவலி ஏற்பட வாய்ப்புள்ளது. அமைதியாக கட் டுப்பாட்டுடன் இருப்பது நல்லது.


துலாம்

ஷஇன்று இனிமையான தருணங்கள் காத்திருக்கின்றன. பொழுதுபோக்கு நிகழ்ச்சியில் பங்கு பெறுவதன் மூலம் நீங்கள் பதற்றத்திலிருந்து விடுபடலாம்.

உங்கள் பணியைப் பொறுத்த வரை சுய வளர்ச்சிக்கு உற்சாகமான நேரம். புதிய முயற்சி களும் சாத்தியம்.

உங்கள் துணையுடன் நண்பர் வீட்டு நிகழ்வுக ளுக்குச் செல்வீர்கள். இருவரும் உற்சாகமாக நேரத்தை கழிப்பீர்கள்.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். உங்கள் குடும்பத் துடன் வெளியிடங்களுக்கு செல்வீர்கள்.

சிறந்த மன உறுதி காரணமாக உங்கள் ஆரோக்கி யம் சிறப்பாக இருக்கும். நீங்கள் திருப்தியாக உணர் வீர்கள்.


விருச்சிகம்

இன்றைய நாள் மிகவும் அற்புதமான நாள். இன்று உங்களிடம் அதிக ஆற்றலும் உறுதியும் காணப்படும்.

பணியில் உங்கள் முயற்சிக்கு வெற்றி கிட்டும். நீங்கள் தன்னம்பிக்கையுடன் பணிகளை மேற்கொள்வீர்கள்.

உங்கள் துணையுடன் நீங்கள் மகிழ்ச்சியாக இருப் பீர்கள். குடும்பத்தில் சுப நிகழ்சிகள் நடைபெறக் காண் பீர்கள்.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். நிதியில் ஸ்தி ரத்தன்மை பெறுவீர்கள்.

ஆரோக்கியத்தில் எந்தப் பிரச்சினையும் இருக் காது. உறுதியான போக்கு காரணமாக உங்கள் ஆரோக் கியம் சிறப்பாக இருக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 26.05.2024




புத்திசாலித்தனம் மற்றும் சம நிலை அணுகுமுறை வெற்றிக்கு வழி-காட்டும். இன்றைய நாளை நன்கு பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

பணியில் மிதமான முன்னேற்றம் காணப்படும். நேரப்படி பணிகளை செய்வதன் மூலம் திறமையாக பணியாற்ற முடியும்.

நீங்கள் உணர்ச்சி வசப்படுவீர்கள். அதனை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள். இதனால் உறவின் நல்லிணக்கம் பாதிக்கும்.

நிதி வளர்ச்சி சுமாராக இருக்கும். பணத்தை கவனமாகச் செலவு செய்யவும்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. அமைதியாக இருந்து பதட்டத்தை தவிர்ப்பதன் மூலம் ஆரோக்கியத்தை பராமரிக்கலாம்.




நீங்கள் உற்சாகமாகவும் ஆற்றலுடனும் இருப்பது நல்லது.பலன்களை எதிர்பாராது செயால்பட்டால் வெற்றி கிடைக்கும்.

பணியிடச் சூழல் உங்களுக்கு உகந்ததாக இருக்காது. அதிகப் பணிகள் மற்றும் அசௌகரியங்கள் உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

நீங்கள் எந்த விஷயத்தையும் தீவிரமாக எடுத்துக் கொள்வீர்கள். சிறிய விஷயத்திற்கு வருத்தப் படுவது உறவை பாதிக்கும்.

உங்கள் வீட்டின் முன்னேற்றத்திற்காக பணம் செலவு செய்வீர்கள். இதனால் அதிக செலவு ஏற்படும். நெருங்கிய சொந்தங்களுக்காக பணம் செலவு செய்வீர்கள்.

உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவது சிறந்தது.




உங்கள் விருப்பங்கள் இன்று நிறைவேறும். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள்.

சக பணியாளர்கள் உதவிகரமாகவும் ஆதரவாகவும் இருப்பார்கள். பணியைப் பொறுத்தவரை நீங்கள் திறம்பட பணியாற்றி உங்கள் செயல்திறனை நிரூபிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு செல்வீர்கள். இதனால் உங்கள் துணையை நன்கு புரிந்து கொள்வீர்கள்.

பணம் அதிக அளவில் காணப்படும். சுப நிகழ்சிக்காக பணத்தை பயன் படுத்தலாம்.

நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




பொதுவில் இன்றைய நாள் சிறப்பாக இருக்கும். உங்களுக்கு பயன் தரும் முடிவுகளை நீங்கள் இன்று எடுக்கலாம்.

நீங்கள் உங்கள் இலக்குகளை அமைத்து அதனை அடைவீர்கள். புதிய வாய்ப்புகள் உங்களுக்கு கிடைப்பதற்கான சாத்தியம் உள்ளது.

உங்கள் துணையுடன் அன்பாக மகிழ்ச்சியாக நடந்து கொள்வீர்கள்.இதனால் இருவரிடையே நல்லுறவு வளரும்.

உங்கள் கையிலுள்ள பணம் உங்களுக்கு போதுமானதாக இருக்கும். அதில் சிறிது பணத்தை பயனுள்ள விஷயங்களுக்கு செலவு செய்வீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இன்று நீங்கள் முழு ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள்.










# தமிழ் மக்கள் அறிவுபூர்வமான தீர்மானத்தை எடுக்க வேண்டும்

## நாமல் ராஜபக்ஷ தெரிவிப்பு

"எதிர்வரும் தேர்தல்களில் தமிழ், முஸ்லிம் மக்களின் வாக்குகள் கொள்ளையடிக்கப்படாதவாறு அறிவுபூர்வமான தீர்மானத்தினை மேற்கொள்ள வேண்டும்."

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர், நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் கட்சி உறுப்பினர்களுக்கு இடையில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலின் பின்னரே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்களுடனான மக்கள் சந்திப்பொன்று மட்டக்களப்பிலுள்ள தனியார் விடுதியொன்றில் நேற்று நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அமைப்பாளர் சந்திரகுமார் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்தச் சந்திப்பில் கட்சியின் தேசிய அமைப்பாளர் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ கலந்துகொண்டார்.

இதன்போது, அனைத்து ஜனாதிபதித் தேர்தலின் போதும் தமிழ் மக்களின் வாக்குகள் கொள்ளையடிக்கப்படுகின்றன எனக் குறிப்பிட்ட நாமல் ராஜபக்ஷ, இம்முறை அவ்வாறு நடக்காமல், அறிவு பூர்வமான தீர்மானத்தைத் தமிழ் மக்கள் மேற்கொள்ள வேண்டும் எனக் குறிப்பிட்டார்.


தமிழ் மக்களின் வாக்குகள் தமக்கு கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் அவர்களுக்காக பணியாற்ற தாம் தயாராக இருக்கின்றார் எனவும் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களின் வாக்குகள் கிடைக்கப்பெறாத மஹிந்த ராஜபக்ஷதான் தமிழர்களுக்காக தொடர்ந்தும் பணியாற்றினார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.









# சீரற்ற காலநிலையினால் மீண்டும் மின்சாரத் தடை

சீரற்ற காலநிலையினால் நாட்டில் 4 லட்சத்து 31 ஆயிரத்து 500 பேர் மின் தடை காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மின் தடை தொடர்பில் நாளாந்தம் அதிகளவான முறைப்பாடுகள் கிடைக்கப் பெறுகின்றமையால், அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் மீளப் பதிலளிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபை பொறியியலாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

கடந்த 4 நாள்களில் 59 ஆயிரத்து 400 மின்சார செயலிழப்புச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன என அந்தச் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

இந்த நிலையில், கிடைக்கப் பெற்றுள்ள 3 லட்சத்து 30 ஆயிரத்துக்கும் அதிகமான முறைப்பாடுகளுக்கு அமைய மின் தடங்கல்களைச் சீரமைக்கும் பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன என இலங்கை மின்சார சபை பொறியியலாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

இதன்படி, நேற்றைய தினம் வரையில் 3 லட்சத்து 30 ஆயிரம் பேருக்கான மின்சார விநியோகத்தை வழமைக்குக் கொண்டு வந்துள்ளதாக இலங்கை மின்சார சபை பொறியியலாளர் சங்கம் குறிப்பிட்டுள்ளது.



# தெதுருஓயா தேக்கத்தின் ஆறு வான்கதவுகள் திறப்பு

அதிக மழையுடனான வானிலையினால் தெதுருஓயா நீர்த்தேக்கத்தின் 6 வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

தாழ்நிலப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் இது தொடர்பில் அவதானத்–துடன் இருக்க வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நேற்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் அதிகூடிய மழைவீழ்ச்சி இரத்தினபுரி மாவட்டத்தின் கேரகல பகுதியில் பதிவாகியுள்ளது.

அங்கு 185.2 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது.

மொரலியஓயாவில் 143.8 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சியும் நிக்கவரெட்டியவில் 100.4 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சியும் பதிவாகியுள்ளன என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இன்றும் நாட்டின் பல பகுதிகளில் பலத்த மழை பெய்யுமென திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

இதற்கமைய, சப்ரகமுவ மாகாணத்திலும் நுவரெலியா மாவட்டத்தின் சில இடங்களிலும் 100 மில்லி மீற்றருக்கும் அதிக மழைவீழ்ச்சி பதிவாகுமென வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேல், வடமேல் மாகாணங்களிலும் கண்டி, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் 75 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகுமெனவும் திணைக்களம் கூறியுள்ளது.

# ‘தமிழின அழிப்பும் தமிழினப்பிரச்சினைக்கான தீர்வும்’ நிகழ்நிலைக் கருத்துப் பகிர்வு இனறு மாலை சூமில்!




யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பில் தமிழினப்படுகொலை – நிகழ்நிலைக் கருத்துப்பகிர்வு “தமிழினஅழிப்பும் தமிழினப்பிரச்சினைக்கான தீர்வும்!” எனும் தலைப்பில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 07 மணியளவில் நிகழ்நிலையில் Zoom செயலியூடாக நடைபெறவுள்ளது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் மே 18 தமிழினப்படுகொலையை மக்கள் மயப்படுத்தும் முயற்சியின் ஓர் அங்கமாக முன்னெடுக்கப்படும் இக் கருத்துப் பகிர்வில் “பன்னாட்டுக் குற்றங்கள்“ நூலின் ஆசிரியர் திரு.இ.நா.ஸ்ரீ ஞானேஸ்வரன் கலந்து கொண்டு கருத்துரை வழங்கவுள்ளார்.

– இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஊடக மற்றும் வெகுசன தொடர்புப் பிரிவு தெரிவித்துள்ளது. இது தொடர்பில் அது மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:–

தமிழினவழிப்புத் தொடர்பாக முள்ளிவாய்க்கால் முற்றத்தில் தனது அஞ்சலியைச் செலுத்திய பன்னாட்டு மன்னிப்புச் சபையின் செயலாளர் நாயகம் அக்னஸ் கலமார்ட்டின் கருத்தும், ஸ்ரீலங்கா அரசால் தமிழர்கள் மீது இனவழிப்பு நிகழ்த்தப்பட்டது என்பதை அங்கீகரித்து மேற்கொள்ளப்பட்ட அமெரிக்க காங்கிரசின் தீர்மானமும் அண்மைக்காலத்தில் மிகக் கவனத்தை ஈர்ப்பவை.

அத்துடன் காஸாவில் நிகழ்ந்து கொண்டிருக்கும் இனப்படுகொலைக் காகவும், றொகிங்கியா முஸ்லிம்களின் மீது நிகழ்த்தப்பட்ட இனவழிப்பு தொடர்பாகவும் பன்னாட்டு நீதிமன்றங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள முறைப்பாடுகள், அவை சார்ந்து நிகழும் விசாரணைகள் என்பவை இனவழிப்புத்தொடர்பாக பன்னாடுகளை எவ்வாறு கையாள்வது என்பதை ஈழத் தமிழர்களுக்கு கற்றுத்தருகின்றன.

இவை சார்ந்து தமிழினம் எவ்வாறு தனது முயற்சிகளை முன்னகர்த்துவது என்பது தொடர்பாக விரிவாக ஆராயப்படவேண்டியுள்ளது.

இனப்படுகொலையின் பின்னர் தொடரும் இனவழிப்பு நடவடிக்கைகளிலிருந்து தமிழினம் தானே தன்னைக் காத்துக்கொள்ளத்தக்க பொறிமுறைகளை உருவாக்க வேண்டிய தேவை எழுந்துள்ளதை பதினைந்து ஆண்டுகளின் நிறைவில் முள்ளிவாய்க்கால் முற்றம் உணர்த்தி நிற்கின்றது.

Zoom Link : https://learn.zoom.us/j/91003679490?pwd=S0lIZ1ZjbzRTTGs0bTJIcDVMaGhyZz09

Meeting ID: 910 0367 9490

Passcode: May18@05

# கடன் விகிதத்தைக் கணிசமாக குறைக்க அரசாங்கம் திட்டம்!



2022 ஆம் ஆண்டளவில் 128 வீதமாக இருந்த அரசாங்கக் கடன் விகிதம் 2032 ஆம் ஆண்டளவில் 95 வீதமாகக் குறையும் என எதிர்பார்க்கப்படுவதாக நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

இதன்படி, 2022 ஆம் ஆண்டளவில் 9.4 வீதமாக இருந்த கடனைச் செலுத்தும் விகிதம் 2027 ஆம் ஆண்டளவில் 4.5 வீதமாகக் குறைக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

2022 ஆம் ஆண்டளவில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 34.6 வீதமான நிதித் தேவையை 2032 ஆம் ஆண்டளவில் 13 வீதமாக குறைந்த மட்டத்திற்குக் கொண்டு வருவதே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பு என்றும் இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

# இந்தியாவில் கைது செய்யப்பட்ட இலங்கையர் நால்வர் புனர்வாழ்வளிக்க வேண்டிய பட்டியலில் இருந்தவர்கள்!



பயங்கரவாதிகள் என்ற சந்தேகத்தின் பேரில் இந்தியாவில் கைது செய்யப்பட்டுள்ள நான்கு இலங்கையர்களும், ஏப்ரல் 21 பயங்கரவாதத் தாக்குதலின் பின்னர் கட்டாயம் புனர்வாழ்வளிக்கப்பட வேண்டிய பட்டியலில் இருந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் சர்வதேச சட்ட விரிவுரையாளர் புன்சர அமரசிங்க இதனைத் தெரிவித்தார்.


ஏப்ரல் 21 தாக்குதலின் பின்னர் புனர்வாழ்வளிக்கப்பட வேண்டிய பட்டியலில் 600 இற்கும் மேற்பட்ட இளைஞர்களின் பெயர்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன.

தற்போது இந்தியாவில் கைது செய்யப்பட்டுள்ள நான்கு பேரும், தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்புடன் நேரடித் தொடர்பினை கொண்டிருந்தனர் என அவர் தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில், அவர்களுக்கு கட்டாயம் புனர்வாழ்வளிக்கப்பட வேண்டும் என ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பில் விசாரணை செய்த ஜனாதிபதி ஆணைக்குழுவினால் பரிந்துரைக்கப்பட்டிருந்ததாக சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் சர்வதேச சட்ட விரிவுரையாளர் புன்சர அமரசிங்க தெரிவித்துள்ளார்.

மேற்படி 4 சந்தேகநபர்களும் பாகிஸ்தானின் அபு என்ற நபரின் வழிகாட்டலில், இந்தியாவின் முக்கிய இடங்களில் பயங்கரவாதத் தாக்குதலை நடத்த திட்டமிட்டிருந்த நிலையில், கடந்த 20 ஆம் திகதி கைது செய்யப்பட்டிருந்தனர் எனக் கூறப்படுவது தெரிந்ததே.

# 43 பாகிஸ்தானிய கைதிகளையும் திருப்பியனுப்புவதற்குத் தீர்மானம்



இலங்கை சிறைகளில் உள்ள 43 பாகிஸ்தானிய கைதிகளையும் திருப்பியனுப்புவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானின் உள்துறை அமைச்சர் மொஹ்சின் நக்விக்கும், பாகிஸ்தானிற்கான இலங்கை உயர்ஸ்தானிகர் ரவீந்திர சி. விஜய குணரத்னவிற்கும் இடையில் நேற்று முன்தினம் இடம்பெற்றச் சந்திப்பின் போது இதற்கான உடன்பாடுகள் எட்டப்பட்டுள்ளன.

மேற்படி 43 பாகிஸ்தானிய பிரஜைகளையும் அந்த நாட்டிற்கு அழைத்துச் செல்வதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என மொஹ்சின் நக்வி தெரிவித்துள்ளார்.







# டயலொக் பாடசாலை ரக்பி போட்டிகள் தொடர்பில் சுயாதீன தொழில்நுட்ப ஆலோசனைக் குழு நியமனம்

எதிர்வரும் டயலாக் பாடசாலை ரக்பி லீக் மற்றும் நொக் –ஔட் போட்டிகளில் தரம், ஒழுக்கம் மற்றும் வீரர்களின் பாது காப்பை மேம்படுத்தும் முயற்சியின் அங்கமாக, இலங்கை பாடசாலை ரக்பி கால்பந்து சங்கம் டயலாக் ஆசி ஆட்டா பி,எல்,சியின் ஒத்துழைப்புடன் ஒரு சுயாதீன தொழில்நுட்ப ஆலோசனைக் குழுவை நியமித்துள்ளது.

மதிப்புமிகு தொழில்முறை நிபுணர்கள் அடங்கிய இந்தக் குழு, போட்டியின் நடத்தையில் ஒரே நிலையை ஏற்படுத் தும் வகையில் தரநிலைகளை உயர்த்தி, தொழில்முறை அணுகுமுறையை கொண்டுவருவதில் கவனம் செலுத் தும்.

உலக ரக்பியின் மையக் கொள்கைகள், மதிப்புகள், வழிகாட்டுதல்கள் மற்றும் விதிமுறைகளுடன் இணங்கும் வகையில் SLSRFA இற்கு தொழில்நுட்பம் மற்றும் இதர தொடர்புடைய பிரச்சினைகளில் ஆலோசனையும் வழி காட்டுதலும் வழங்கும் பொறுப்பை இந்த ஆலோசனைக் குழு கொண்டுள்ளது.

இத்தகைய ஆலோசனைகள் மற்றும் பரிந்துரை களை செயற்படுத்தும் பொறுப்பு SLSRFA மீது உள் ளது.

புதியதாக அமைக்கப்பட்ட குழுவில், சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் எம். ஆர். லதீப் (ஓய்வு பெற்றவர்), முன்னாள் சிரேஷ்ட பொலிஸ் ஆணையாளர் மற்றும் தேசிய ரக்பி அணித்தலைவர் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் எம். எச்.மார்ஸோ (ஓய்வு பெற்றவர்), இலங்கை ரக்பியின் முன்னாள் தலைவர் திரு. லசித குணரத்ன, சர்வதேச ரக்பி அங்கீகாரம் பெற்ற நீதித்துறை அதிகாரி திரு. அருண ஜய சேகர, SLSFRA முன்னாள் தலைவர் திரு. ரஞ்சித் சந்திர சேகர, விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி மருத்துவ நிபுணர் கலாநிதி. நமித் சங்கல்பன, ஆசிய ரக்பி மற்றும் சர்வதேச ரக்பி போட்டி நாள் மருத்துவர் மற்றும் விளையாட்டு மருத் துவ ஆலோசகர் கலாநிதி. கே. ஏ. பி. கிரியெல்ல ஆகி யோர் அடங்கியுள்ளனர்.

இதுதொடர்பில் இலங்கை பாடசாலை ரக்பி உதைபந்து சங்கத்தின் தலைவர் கமல் அரியசிங்க தெரிவிக்கை யில்,

“ரக்பி தொழில்நுட்ப ஆலோசனைக் குழுவின் நியம னத்தை அறிவிப்பதில் நாங்கள் பேருவகை அடைகின்றோம். இந்த முன்னெடுப்பின் முதன்மை நோக்கம் யாதெனில் இலங்கை ரக்பி துறையில் பிரமுகர்களின் திறமைகளைப் பயன்படுத்தி எங்கள் போட்டிகளின் தரம் மற்றும் தரநிலை களை உயர்த்துவதாகும். இவர்களின் மதிப்புமிக்க அறிவு, தரநிலைகளை உயர்த்துவதில் மட்டுமல்லாமல், மாணவர் களின் பார்வையில் பல அனுகூலங்களைத் தருவதி லும் உதவும். மேலும், இவர்களின் வழிகாட்டுதல், அபா யங்களை குறைப்பதில், ஒழுக்க பிரச்சினைகளைத் தீர்ப் பதில் மற்றும் களத்தில் பாதுகாப்பு பிரச்சினைகளைச் சரியாக நிர்வகிப்பதில் முக்கியப் பங்காற்றும்,” – என்றார்.

முக்கிய கொள்கைகள் அடிப்படையில் செயல்படும் ஆலோசனைக் குழு, போட்டியின் அமைப்பு, விதிமுறைகள் மற்றும் ஒழுங்குமுறை, பாதுகாப்பு நடவடிக்கைகள், தரவு முகாமைத்துவம், ஆளுகை, நிர்வாகம், டிஜிட்டல் தீர்வுகள், வீரர்களின் மேம்பாட்டு வழிமுறைகள் மற்றும் வீரர்களின் நலன் ஆகிய பல்வேறு அம்சங்களை வலுப்படுத்த முயல்கி றது. இந்த முக்கிய பகுதிகளை கவனிக்கையில், போட்டியின் தொழிற்பாடு நிலையாக நடைபெறுவதையும், களத்திலும் களத்திற்கு வெளியிலும் சீராகச் செயல்படுவதையும் உறுதி செய்கின்றது.

இந்த கொள்கைகளின் அடிப்படையில் குழுவின் கூட்டு திறமை மற்றும் உறுதியான பின்பற்றுதல் மூலம், 2024 டயலொக் பாடசாலை ரக்பி பருவத்தை மிக வெற்றிகரமான ஒரு முன்னெடுப்பாக மாற்ற முனைகிறது.

அனைத்து பங்கேற்பாளர்களுக்கும் பாதுகாப்பான மற் றும் திருப்திகரமான அனுபவத்தை வழங்க இது உத வும். பாடசாலை ரக்பி வீரர்களை தேசிய அணியை பிரதி நிதித்துவப்படுத்தும் அளவுக்கு அவர்களை செதுக்கி யெடுப்பதே இந்த முன்னெடுப்பின் அறுதி அவா ஆகும்.






# சிறந்த முகாமையாளர்களைக் கொண்ட நிறுவனமானது ‘யூனியன் அஷ்யூரன்ஸ்’

இலங்கையின் முன்னணி ஆயுள் காப்புறுதி சேவைகள் வழங்குநரான யூனியன் அஷ்யூரன்ஸ், 2023ஆம் ஆண்டுக்கான சிறந்த முகாமையாளர்களுக்கான விருதுகள் நிகழ்வில் கௌரவிப்பைப் பெற்றிருந்தது.

2024 ஏப்ரல் 4ஆம் திகதி கொழும்பு கிங்ஸ்பரி ஹோட்டலில் நடைபெற்ற இந்த நிகழ்வை, Colombo Leadership Academy ஏற்பாடு செய்திருந்தது.

மக்கள் முகாமைத்துவத்தில் சிறப்பை பேணுகின்றமையை கௌரவிக்கும் வகையில், சிறந்த தலைமைத்துவ செயற்பாடுகள், ஊழியர் வளர்ச்சி மற்றும் விருத்தியை ஊக்குவித்தல் மற்றும் சிறந்த பெறுபேறுகளை ஏற்படுத்திக் கொடுக்கும் நிறுவனங்களை கௌரவிக்கும் வகையில் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்படுகின்றது.

இந்த நிகழ்வின் போது, யூனியன் அஷ்யூரன்ஸ், “சிறந்த முகாமையாளர்களைக் கொண்ட நிறுவனம்” எனும் கௌரவிப்பை தொடர்ச்சியான மூன்றாவது ஆண்டாகவும் பெற்றுக் கொண்டது.

ஊழியர்களின் வெற்றிகரமான செயற்பாடுகளுக்கு தூண்டுகோலாக அமைந்திருப்பது, பொருத்தமான பயிற்சித் திட்டங்களை வழங்குவது, போதியளவு வள வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது மற்றும் ஒப்பற்ற ஆதரவளிப்பது போன்றவற்றுக்கான அர்ப்பணிப்பு மீண்டும் உறுதி செய்யப்பட்டிருந்தது.

முகாமையாளர்கள் தமது பணி நிலைகளில் மாத்திரம் முன்னேறாமல், தமது நிபுணத்துவ வளர்ச்சியிலும் முன்னேற்றம் கண்டு, நிறுவனத்தின் ஒட்டு மொத்த வெற்றியில் பங்களிப்புச் செலுத்துவதை இந்த வழிமுறை உறுதி செய்கின்றது.

இந்த நிகழ்வில் கௌரவிக்கப்பட்டிருந்தவர்களில், குபேந்திரன் தர்மலிங்கம் – வலய முகாமையாளர், உதேஹ இந்திரஜித் – வலய முகாமையாளர், நிலுஷன் பெர்னான்டோ, சிரேஷ்ட முகாமையாளர் – மீள் காப்புறுதி, ஆயுள் செயற்பாடுகள் மற்றும் திவ்யா சிவநாதன் – பிராந்திய முகாமையாளர் ஆகியோர் “சிறந்த முகாமையாளர்கள் பெறுபேறுகள் பதிவு மற்றும் நிறைவேற்றுச் சிறப்பு” பிரிவில் வெற்றியாளர்களாக தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

சந்தைப்படுத்தல் செயற்பாடுகள் தலைமை அதிகாரி ரிஸ்னாட் ஹுசைன் மற்றும் மக்கள் செயற்பாடுகளுக்கான முகாமையாளர் அசங்கி விக்ரமரட்ன ஆகியோருக்கு “நிறுவனத்தின் நோக்கத்துக்கமைய செயலாற்றியிருந்த சிறந்த முகாமையாளர்“ விருது வழங்கி கௌரவிக்கப்பட்டிருந்தது.

வெற்றியாளர்களின் சிறந்த தலைமைத்துவ திறன்கள், மூலோபாய சிந்தனைகள் மற்றும் சிறந்த பெறுபேறுகளை எய்துவதற்கான அர்ப்பணிப்பு போன்றன கௌரவிக்கப்பட்டிருந்தன.

இந்த விருதுகள் தொடர்பில் யூனியன் அஷ்யூரன்ஸ் பிரதம மக்கள் அதிகாரி இம்தியாஸ் ஆனிப் கருத்துத் தெரிவிக்கையில்,

“எமது சகல அணி அங்கத்தவர்களின் முன்னேற்றத்துக்கும் வலுவூட்டுவது தொடர்பில் யூனியன் அஷ்யூரன்ஸ் நிறுவனத்தைச் சேர்ந்த நாம் உறுதியாக கவனம் செலுத்துகின்றோம். அனைவருக்கும் சரியான ஆதரவு உட்கட்டமைப்பை அணுகுவதற்கான கலாசாரத்தை நாம் கட்டியெழுப்பியுள்ளோம். அதனூடாக அவர்களுக்கு தமது பணிநிலையில் வெற்றிகரமாக இயங்கக்கூடியதாக இருக்கும். நிறுவனத்துக்கு ஒவ்வொரு ஊழிய அங்கத்தவரும் பிரத்தியேகமான பங்களிப்பை வழங்குகின்றார் என்பதில் நாம் நம்பிக்கை கொண்டுள்ளதுடன், நிறுவனம் எனும் வகையில் நாம் மேற்கொள்ளும் செயற்பாடுகள் இவர்களை ஊக்குவித்து, வழிநடத்தி, சிறந்த தலைவர்களாக கட்டியெழுப்புவதற்கு பங்களிப்பு வழங்குகின்றது.” – என்றார்.







# புலமைப்பரிசில் வெற்றியாளர்களுக்கு மாவட்ட ரீதியில் கௌரவிப்பு நிகழ்வு

## AIA இன்சூரன்ஸின் திட்டம் 29 ஆவது வருட நிறைவில்

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் சிறந்து விளங்குபவர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் AIA இன்சூரன்ஸின் உயர்கல்விப் புலமைப்பரிசில் திட்டமானது அண்மையில் தனது தொடர்ச்சியான 29 ஆவது வருட நிறைவைக் கொண்டாடியிருந்தது.

இலங்கையின் இத்திட்டம் 1994 ஆம் வருடம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து நாட்டின் பிரகாசமான மாணவர்கள் AIA இன் வாடிக்கையாளர்களாக இருந்தாலும் அல்லது இல்லாவிட்டாலும் அவர்களின் வெற்றிக்கான பயணத்தில் அவர்களுக்கு ஆதரவளிப்பதற்காகவென அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.

இந்த வருடத்திற்கான விருது வழங்கும் விழாவில் அடுத்த தலைமுறைத் தலைவர்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில் மிகவும் பெறுமதியான ஆலோசனைகளையும் மற்றும் அறிவூட்டலையும் பகிர்ந்து கொண்ட இலங்கையின் புகழ்பெற்ற கல்வியாளர்களில் ஒருவரான பேராசிரியர் அஜித் டி அல்விஸ் கலந்து சிறப்பித்திருந்தார்.

மிகவும் திறமையான மாணவர்கள் அவர்களின் உயர்கல்வியினைத் தொடர்வதற்கு அதிகாரம் அளிப்பதன் மூலம் தேசத்தின் எதிர்காலத்தை வளர்ப்பதில் AIA இன் அர்ப்பணிப்புக்கு இந்த நிகழ்வு மிகவும் சான்றாகவே அமைந்திருந்தது.

யுஐயு உயர்கல்விப் புலமைப்பரிசில் விருது வழங்கும் நிகழ்வில் இலங்கையின் மிகச் சிறந்த கல்வியாளர்களில் ஒருவரான பேராசிரியர் அஜித் டி அல்விஸ் மிகவும் அறிவுபூர்வமான தனது உரையினை வழங்கியிருந்தார்.

மீநுண் தொழில்நுட்பம், உயிரித் தொழில்நுட்பம், தகவல் தொழில்நுட்பம் மற்றும் நரம்பியல் தொழில்நுட்பம் ஆகிய நான்கு தொழில்துறைப் புரட்சிகள் ஒரே நேரத்தில் நிகழ்ந்ததன் மூலம் நாம் வாழும் தனித்துவமான சகாப்தத்தின் சிறப்பைப் பற்றியும் அவர் வலியுறுத்தி உரையாற்றியிருந்தார்.

இத்தொழில்நுட்ப முன்னேற்றங்களுக்கு மத்தியில் பேராசிரியர் டி. அல்விஸ் புவி வெப்பமடைதல் பற்றிய மிகவும் அழுத்தமான பிரச்சினை ஒன்றையும் முன்னிலைப்படுத்தியிருந்தார்.

தனிநபர்களே தங்கள் செயல்களுக்கு பொறுப்பேற்க வேண்டும் மற்றும் நிலைபேறான நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என்றும் இதன்போது அவர் மேலும் வலியுறுத்தியிருந்தார்.

கல்வி என்பது சாதனைக்காகப் படிப்பது மட்டுமன்றி, கற்றலுக்கான நோக்கத்தையும் ஆர்வத்தையும் வளர்ப்பதன் முக்கியத்துவத்தையும் இங்கு அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

அறிவை மேம்படுத்துவதற்கு வாசிப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி புலமைப்பரிசில் வென்றவர்கள் சமூகத்திற்கு அர்த்தமுள்ள பங்களிப்பை மேற்கொள்ள வேண்டும் எனவும் ஊக்குவித்திருந்தார்.

மேலும் மற்றவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல், நாட்டுக்குச் சேவை செய்தல் மற்றும் மக்களிடத்தில் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துதல் போன்றவற்றினால் உண்மையான மனநிறைவு கிடைக்கும் என்பதையும் இங்கு அவர் குறிப்பிட்டுக் கூறியுமிருந்தார்.

AIA உயர்கல்விப் புலமைப்பரிசிலானது இதனைப் பெறும் மாணவர்களின் கல்வி மற்றும் தொழில் அபிலாஷைகளில் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக புலமைப்பரிசில் பெறுபவர்களின் இதயப்பூர்வமான நன்றியறிதலின் மூலம் இந்நிகழ்வு மேலும் சிறப்பிக்கப்பட்டிருந்தது.

750 க்கும் மேற்பட்ட மாணவர்கள் உயர்தரக் கல்வியில் நுழைந்தவுடன் புலமைப்பரிசிலினைப் பெறுவதற்குத் தகுதி பெற்றுள்ளதுடன் 550 க்கும் மேற்பட்ட மாணவர்கள் ஏற்கனவே மாதாந்த உதவித் தொகை மூலம் பயனடைகின்றார்கள். உண்மையில் இத்திட்டம் மருத்துவம், சட்டம் மற்றும் பொறியியல் உட்பட பல்வேறு துறைகளில் எதிர்காலத் தலைவர்களை உருவாக்குவதற்கு வழி வகுக்கின்றது.







# மக்கள் வங்கியின் 'பௌத்த நலன்புரி நிதியம்' கல்விப் புலமைப்பரிசில் திட்டம் ஆரம்பம்

மக்கள் வங்கி மற்றும் ஸ்ரீதலதா மாளிகை ஆகியன ஒன்றிணைந்து சமூக அக்கறையை வளர்க்கும் நோக்குடன் 'பௌத்த நலன்புரி நிதியம்' என்ற கல்விப் புலமைப்பரிசில் திட்டத்தை ஆரம்பித்துள்ளன.

கொழும்பு 02 இல் அமைந்துள்ள மக்கள் வங்கி தலைமை காரியாலயத்தில் அண்மையில் இந்த அங்குரார்ப்பண நிகழ்வு இடம்பெற்றதுடன், தியவனத நிலமே பிரதீப் நிலங்க தெல, மக்கள் வங்கியின் தலைவர் சுஜீவ ராஜபக்ஷ மற்றும் மக்கள் வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி / பொது முகாமையாளர் கிளைவ் பொன்சேகா ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்துள்ளனர்.

இத்திட்டத்தை ஆரம்பித்து வைப்பதைக் குறிக்கும் வகையில் 'பௌத்த நலன்புரி நிதியத்திற்கு' நன்கொடையொன்றை மக்கள் வங்கி அளித்துள்ளதுடன், மாணவர்களுக்கு புலமைப் பரிசில்களையும் வழங்கியுள்ளது.

மக்கள் வங்கி மற்றும் ஸ்ரீதலதா மாளிகை ஆகியன ஒன்றிணைந்து, 1995ஆம் ஆண்டில் முதன்முதலாக பௌத்த நலன்புரி நிதியத்தை ஸ்தாபித்திருந்ததுடன், இன, மத பேதமின்றி, எதிர்காலத்தின் சிற்பிகளான சிறுவர்களின் எதிர்கால நலனுக்கு இது மாபெரும் உரமாக அமைந்தது. இத்திட்டத்தினூடாக பல்லாயிரக்கணக்கான சிறுவர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் தமது கல்வியை சிறப்பாக்கியுள்ளனர்.

இப்புதிய திட்டமானது 2024 ஜ/ன் முதல் நடைமுறைப் படுத்தப்படவுள்ளதுடன், தற்போது வழங்கப்படுகின்ற நன்மைகளை அதிகரித்து, குறைந்த வருமானத்தை ஈட்டுகின்ற குடும்பங்களிலுள்ள பிள்ளைகளுக்கும் பயனளிக்கும் வகையில் வழங்கப்படவுள்ளது.

அதற்கமையாக, தரம் 6 முதல் 11 வரை கல்வி கற்கின்ற 2,000 மாணவர்களுக்கு இத்திட்டத்தினூடாக மாதாந்த புலமைப்பரிசில்கள் வழங்கப்படவுள்ளதுடன், நாடெங்கிலுமுள்ள பிரதேச செயலாளர் பிரிவுகள் மத்தியில் ஒவ்வொரு பிரிவிலிருந்தும் 10 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு, ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது. ஐந்து ஆண்டுகளில் சுமார் 10,000 மாணவர்களுக்கு புலமைப்பரிசில்களை வழங்குவதே இதன் நோக்கம். இத்திட்டத்தின் முதற்கட்டத்தில் மக்கள் வங்கியும் அதன் ஊழியர்களும் இந்நிதியத்திற்கு பங்களிக்கவுள்ளனர்.

தியவதன நிலமே பிரதீப் நிலங்க தெல இது குறித்து கருத்து வெளியிடுகையில்,

"உலகெங்கிலும் பௌத்தர்களின் புனித தலமாகத் திகழ்ந்து வருகின்ற ஸ்ரீதலதா மாளிகையில் சமய செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றமைக்குப் புறம்பாக, இன, மத பேதமின்றி நாட்டிலுள்ள அனைத்து மக்களினதும் நலன் சார்ந்த சமூகச் செயற்பாடுகளும் 'எமது அக்கறை' என்ற தொனிப் பொருளின் கீழ் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்தநோக்கத்துடன்பல்வேறுசெயல்திட்டங்கள்நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளன. இதற்கு ஸ்ரீ தலதா மாளிகையுடன் மக்கள் வங்கி எப்போதும் கைகோர்த்து வந்துள்ளது. இந்த வகையில், இத்தேசத்தின் புதல்வர்கள் மற்றும் புதல்விகளின் நலனுக்கான 1995 ஆம் ஆண்டில் பௌத்த நலன்புரி நிதியம் ஸ்தாபிக்கப்பட்டது.

ஸ்ரீதலதா மாளிகையால் இந்த புலமைப்பரிசில் நிதியத்திற்கு இது வரை ரூபா 500 மில்லியன் தொகை வழங்கப்பட்டுள்ளது. இன்று ஆரம்பிக்கும் இப்புதிய திட்டத்துடன், 'பௌத்த நலன்புரி நிதியம்' இன்னும் வலுவானதாக மாறும். அறிவும், ஆற்றலும் நிறைந்த சிறுவர்களைக் கொண்ட தலைமுறையே இத்தேசத்தின் எதிர்காலத்தின் உரமாகத் திகழ்வுள்ளது. இந்த உன்னதமான முயற்சி உலகினை வெற்றி காண்பதற்கு அவர்களுக்கு உதவும்," என்று குறிப்பிட்டார்.

மக்கள் வங்கியின் தலைவர் சுஜீவ ராஜபக்ச இது குறித்து கருத்து வெளியிடுகையில்,

"தேசத்தின் எதிர்கால தலைமுறைகளாகத் திகழும் சிறுவர்களுக்கு வாழ்வளிக்கின்ற வகையில், காலத்தின் தேவையாக அமைகின்றஒருமுயற்சியாகவேமக்கள்வங்கிமற்றும்ஸ்ரீதலதா மாளிகை ஆகியன இணைந்து நடைமுறைப்படுத்தும் இந்த பௌத்த நலன்புரி நிதிய கல்விப் புலமைப்பரிசில் திட்டத்தை நான் காண்கின்றேன்.

பல தசாப்தங்களாக, தேசத்தின் தங்கக்கிரீடத்தின் தாயகமான ஸ்ரீதலதா மாளிகையின் உத்தியோகபூர்வ வங்கியாளராக மக்கள் வங்கி திகழ்ந்து வருவதுடன், மிகவும் கௌரவமான உறவுமுறையையும் சிறப்பாகப் பேணி வந்துள்ளது. ஸ்ரீதலதா மாளிகையில் இடம்பெறுகின்ற வருடாந்த எசல பெரஹரா உற்சவத்திற்கு பல தசாப்தங்களாக மக்கள் வங்கி அனுசரணையளித்து வந்துள்ளது. இப்புதிய திட்டத்தினூடாக எமக்கு இடையிலான பிணைப்பு மேலும் ஆணித்தரமாக நிலைநாட்டப்பட்டுள்ளது," என்று குறிப்பிட்டார்.

மக்கள் வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரிஃபொது முகாமையாளர் கிளைவ் பொன்சேகா கருத்து வெளியிடுகையில்,

"அறுபத்தி இரண்டு ஆண்டுகளாக இலங்கை மக்களுக்கு வங்கி மற்றும் நிதிச் சேவைகளை மக்கள் வங்கி தொடர்ச்சியாக வழங்கி வந்துள்ளது. இலாபத்திற்கு முன்னுரிமையளிக்காது, நாட்டின் பொது மக்கள் மீது அக்கறை கொண்டுள்ள வங்கி என்ற அர்ப்பணிப்புடன் இது தொடர்ந்தும் பயணித்து வருகின்றது.

மக்கள் வங்கியின் சமூக நலன்புரித் திட்டங்கள் அனைத்தும் தற்சமயம் 'மகாஜன மெஹெவர' என்ற நாமத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன், அதன் ஒரு அங்கமாகவே, நாட்டிலுள்ள குறைந்த வருமானமீட்டும் குடும்பங்களிலுள்ள பிள்ளைகளின் கல்வித் தேவைகளுக்கு உதவுவதற்காக ஸ்ரீ தலதா மாளிகையுடன் இணைந்து பௌத்த நலன்புரி நிதியம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இத்தகைய சமூக நலன்புரிச் செயற்திட்டங்களுக்கு எதிர்காலத்திலும் தொடர்ந்து பங்களிப்பதே எமது நோக்கம்," என்று குறிப்பிட்டார்.